நமது ஈழநாடு
www.namathueelanadu.com


குரல் 02 மலர் 20 பெப்ரவரி 2022 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com இணையம்: www.namathueelanadu.c

Simply Scan the QR code Your Phone Camera


Download the NamathuEelanadu app

'ஒடுக்கப்பட்ட மக்களே ஒடுக்கு முறைக்கு எதிராக போராட வேண்டும், அநீதிக்கு ஆளாகி நிற்பவர்களே அநீதியை ஒழித்துக்கட்ட முன்வர வேண்டும்.

*- தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன்*



# வலிசுமந்த பாலத்தில் இன்றும் அகதிகளாயே நடக்கின்றோம்




ஈழநாடு

பெப்ரவரி 2022



# பயங்கரவாத தடைச் சட்டத்தால் தமிழரின் உரிமைப் போராட்டத்தை தடுக்க இயலாது



தீபச்செல்வன்

இலங்கை அரசு உருவாக்கி வைத்திருக்கும் பயங்கரவாத சட்டம் உலகின் கொடூரமான சட்டமாக கருதப்படுகிறது. பொதுவாக சட்டங்கள் மக்களையும் ஜனநாயகத்தையும் பாதுகாக்கவே உருவாக்கப்படுகின்றது. ஆனால் இனமொன்றையே நசுக்குவதற்காக உருவாக்கப்பட்டதே பயங்கரவாத தடைச்சட்டம். இதனை உடன் நீக்க வேண்டும் என்று இலங்கை அரசு மீது பன்னாட்டுச் சமூகம் நெருக்கடிகளை ஏற்படுத்தி வரும் நிலையில் “நீக்காமல் திருத்துகிறோம்” என்று கூறி சர்வதேசத்தை சமாளிக்க முற்படுகிறது இலங்கை. ஆனால் புதிய சட்டம் இன்னும் ஆபத்தைக் கொண்டது என்றும் அது முற்றாக நீக்கப்பட வேண்டும் என்றும் குரல்கள் எழத் துவங்கியுள்ளன.

ஈழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் பெரும் எழுச்சி கொண்டிராத காலப் பகுதியாக எழுபதுகளின் இறுதியை கருதலாம். தனிச்சிங்கள சட்டம் அதனை தொடர்ந்து முன்னெடுத்த இனப்படுகொலைகளும் தனி ஈழமே தீர்வு என்ற நிலைக்கு தமிழர்களை தள்ளிய காலத்தில் குறிப்பாக தமிழ் இளைஞர்களை கபளீகரம் செய்கிற நோக்கில் சிங்கள அரசால் பயங்கரவாத தடைச்சட்டம் உருவாக்கப்பட்டது. 1979ஆம் ஆண்டு ஜூலை 17ஆம் நாள் ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தில் 48ஆவது இலக்க பயங்கரவாத தடைச்சட்டம் ஒரு தற்காலிக ஏற்பாடாகத்தான் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அதுவே இன்றைக்கு 43 ஆண்டுகள் கடந்தும் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அழித்து வருகிறது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஈழத் தமிழர்கள் கீழ்த்தரமான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுவதாகவும் தமிழ் சிறுபான்மை மக்களையே பயங்கரவாதத் தடைச்சட்டம் பாதிப்பதாகவும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் கடந்த காலத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பில் ஆராய்ந்த ஐ.நாவின் விசேட நிபுணர் பென் எமர்சன் கூறியுள்ளார். எமர்சன் வருகை தந்த காலத்தில் நடைமுறையில் இருந்த ரணில் - மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டம் மிகவும் கொடுமையானது என்பதை பகிரங்கமாக ஏற்றிருந்தது.

பயங்கரவாதத் சட்டம் என்றால் என்ன? இது உதிரத்தை உறைய வைக்கும் மனதை நடுங்கச் செய்யும் விரிவாக இருக்கலாம். பயங்கரவாத விசாரணைப் பிரிவு, பொலிஸ் மற்றும் பாதுகாப்பு அமைச்சிற்கு கைது செய்தல், விசாரணை செய்தல், ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளல் என்பவை தொடர்பில் பரந்தளவிலான அதிகாரத்தை பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் அவசரகால சட்ட விதிமுறை வழங்குகிறது. சந்தேகத்தின் அடிப்படையிலேனும் கைது செய்வதற்கான பிடியாணையை பிறப்பிக்க முடியும். விசாரணைக்காக நபர் ஒருவரை வெவ்வேறு இடங்களுக்குக் கொண்டுச் செல்கின்ற நிலையில் நீதிமன்ற வழிநடத்தல் இன்றி சொத்துக்களை முடக்க முடியும். சந்தேக நபரை தடுத்து வைப்பதன் கால எல்லையை 18 மாதங்களாக நீடிக்க முடியும். எனினும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்படும் ஒருவர் வழக்கு விசாரணை முடியும் வரை கால வரையரையின்றி தடுத்து வைக்கும் நிலையே நடைமுறையில் உள்ளது.



கைதாகி சிறையில் உள்ளபோது பாரிய மற்றும் கீழ்த்தரமான சித்திரவதைகள் இடம்பெறுகின்றன. நீதிமன்றங்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்ற சம்பவங்கள் மிகவும் அரிதாகவே இடம்பெறுகின்றன. நீதிமன்றங்களினாலும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் உரிய கவனம் செலுத்த அதிகாரமற்றும் அந்த நடவடிக்கைக்கு இணக்கம் செய்யும் நிலையுமே நடைமுறையில் உள்ளது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பொறுத்தவரையில் நீதிமன்றத்தை பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படும் ஒரு நிறுவனமாகவே கருகிறது. சிறுபான்மை தமிழ் இன மக்களுக்கான நீதி மறுத்து அவர்கள்மீதான மனித உரிமை மீறலை நியாயப்படுத்தியும் எதையும் செய்யும் அதிகாரத்தை இச் சட்டம் வழங்குகிறது.

தமிழ் மக்கள்மீது இன அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவே பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. அதற்கு முந்தைய காலங்களில் அரசின் மூலம் உத்தியோக பூர்வமற்ற முறையில் இனக் கலவரங்கள் ஏற்படுத்தப்பட்டன. பயங்கரவாதத் தடைச்சட்டம் இந்த தீவின் சிறுபான்மைத் தமிழ் இன மக்களை பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தி அழிக்கும் உத்தியோகபூர்வ முறையை அல்லது அதிகாரத்தை அரச எந்திரம் மற்றும் பாதுகாப்பு படைகளுக்கும் இனவாதிகளுக்கும் கையளித்தது. ஒடுக்குமுறைக்கு உள்ளான ஈழத் தமிழ் மக்கள் தனி நாடு ஒன்றிலேயே சுதந்திரமாக வாழ இயலும் என்றும் அது தமிழீழம் என்ற நாட்டிலேயே சாத்தியமாகும் என்றும் முடிவுக்கு வர அடிப்படையாக இருந்த காரணங்களில் பயங்கரவாதத் தடைச்சட்டமும் ஒன்றாகும்.

பயங்கரவாத தடைச் சட்டம் காரணமாக ஈழத் தமிழ் மக்கள் கடந்த 43 வருடங்களாக பெரும் இன ஒடுக்குமுறைகளை சந்தித்து வருகின்றனர். தென்னிலங்கையைப் பொறுத்த வரையில் எவரும் எந்த நேரத்திலும் எந்தக் காரணத்தைக் கூறியேனும் கைது செய்யப்படலாம் என்றும் அவருக்கு என்ன நேர்ந்தாலும் அதனைக் குறித்து கேட்க இடமில்லை என்ற நிலையும் காணப்பட்டது. இது தமிழ் மக்களின் அரசு அல்ல என்பதையும் இது தமிழ் மக்களை ஒடுக்கி அழிக்கும் அரசு என்பதையும் தமிழ் மக்கள் தமக்கான பாதுகாப்பை தமிழ் அரசு ஒன்றின் ஊடாகவே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற யதார்த்தத்தையும் இச்சட்டத்தின் நடைமுறைகள் ஈழத் தமிழ் இனத்திற்கு உணர்த்தி நின்றன.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்தபோதிலும், இதுவரை அதற்கான உரிய நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் பிரட் அடம்ஸ் கடந்த காலத்தில் கூறியதும் இங்கே சுட்டிக்காட்டத்தக்கது.

பயங்கரவாத சட்டம் உருவாக்கப்பட்டு 43 ஆண்டுகள் என்றால் “பயங்கரவாத சட்டத்தை நீக்கு!” என்று தமிழ் மக்கள் குரல் எழுப்பியும் 43 ஆண்டுகள் ஆகிவிட்டன. இச் சட்டத்தால் பல ஆயிரக்கணக்கானவர்கள் தங்கள் பிள்ளைகளை, தாய், தந்தையரை இழந்துபோயுள்ளனர். கைதகளின் உறவுகள் பல்வேறு போராட்டங்களை நடத்தியுள்ளனர். சிறையில் காலவரையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள், பல போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். எல்லாப் போராட்டங்களும் தீர்வின்றி முடக்கப்பட்டுள்ளன. பயங்கரவாதத் சட்டமும் அதனை கொண்டு கைதுசெய்யப்பட்டவர்களும் கொஞ்சமும் மனித நேயமற்ற முறையில் தென்னிலங்கையில் ஆளும் எதிர்கட்சிகளின் அரசியல் முதலீடுகளாக ஆகியிருப்பதே இத் தீவின் பெரும் துயரமாகும்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை மீளாய்வுக்கு உட்படுத்தி வருவதாக தற்போதைய அரசின் நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி கடந்த வருடத்தில் கூறினார். ஆக இலங்கை அரசாங்கம் பயங்கரவாத சட்டத்தை நீக்கப் போவதில்லை என்று முன்னரே அறிவித்திருந்தது. தமிழ் மக்களை தொடர்ந்தும் ஒடுக்கி ஆளும் ஒரு அரசு, அந்த ஒடுக்குமுறைக்கு எதிராக அவர்கள் கிளர்ந்தெழாமல் தடுத்து ஒடுக்க இந்தச் சட்டம் தேவை என்று கருதுவதன் காரணமாகவே இந்தச் சட்டத்தை எப்படியோ நடைமுறையில் வைத்திருக்க வேண்டும் என்று கருதுகிறது. அத்துடன் பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு புதிய வடிவம் கொடுத்து அதனை தொடர்ந்தும் தீவிரப்படுத்த முனைவதே இங்கு ஈழத் தமிழ் இனம் சந்திக்கப் போகும் ஆபத்தாகும். அத்துடன் சர்வதேசத்தின் நன்கொடைகளைப் பெறவும் பொருளதார நெருக்கடிகளில் இருந்து விடுபடவும்

ஈழத் தமிழர்களின் தனிநாட்டு உரிமைப் போராட்டத்தை ஒடுக்கும் சட்டத்தையே இலங்கை அரசு பயங்கரவாதத் தடைச்சட்டம் என்று அழைக்கிறது. தமிழ் மக்களின் சுய உரிமையை அவர்களிடமே கையளித்தல், அவர்களின் தாயகப் பிரதேசத்தில் அவர்களே ஆட்சி புரிதல், அவர்களின் தாயகத்தை அபகரிக்காது விடுதல், அவர்கள் மீதான இன ஒடுக்குமுறை மற்றும் இன அழிப்புச் செயல்களை நிறுத்திக் கொள்ளல் என்பனவற்றை மேற்கொள்ளாமல் எந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்தினாலும் தமிழர்களின் இன உரிமைப் போராட்டத்தின் பயணத்தை தடுக்க இயலாது. மாறாக ஈழ விடுதலைப் போராட்டத்தை அது நியாயப்படுத்தவே செய்யும். முள்ளிவாய்க்காலுக்குப் பிறகும் இனவழிப்பு நிறுத்தப்படாதிருக்கையில் இனவிடுதலைக்கான போராட்டமும் தொடர்ந்தபடியே இருக்கிறது. அதற்கான நிர்பந்தத்தை இலங்கை அரசே உருவாக்குகிறது என்பதே இங்கு மெய்யான நிலையாகும்.



# தொப்புள்க் கொடி உறவுகளுக்குள் வெடிக்கும் வன்முறைகள்

**-தந்திரீகன்-**

தாயகத் தமிழர்களும், தமிழகத் தமிழர்களும் தொப்புள் கொடி உறவுகள். இவ்விதமான உறவு காணப்படுவதால் தான், 'சுயநிர்ணயத்தின்' அடிப்படையில் 'தனிநாடு' கோரிவிடுவார்கள் என்ற அச்சம் சிங்கள தேசத்துக்கும், டில்லிக்கும் இன்னமும் நீடித்துக்கொண்டிருக்கின்றது.

இந்த அச்சத்தின் நீட்சியால் தான் தாயகத் தமிழர்களும், தமிழகத் தமிழர்களும் ஒற்றுமையாக இருந்து விடக்கூடாது என்பதில் சிங்கள தேசமும், டில்லியும் மிகக் கவனமாக இருந்து வருகின்றன.

அதற்காக, இருதரப்பும் 'கீரியும் பாம்புமாக' இருக்க வேண்டும் என்பதை மையப்படுத்தி பல்வேறு திரைமறைவு நடைவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, தாயக, தமிழக கடற்றொழிலாளர்களுக்கு இடையில் கடல் அலைகள் கூட அழிக்காத வகையில் தீ மூட்டப்பட்டு அவ்வப்போது கொளுந்து விட்டு எரியச் செய்யப்பட்டு அதில் சில தரப்புக்கள் 'சுயலாபம்' அடைந்து வந்தன.

தற்போது அந்த நிலைமைகளைத் தாண்டி முரண்பாடுகள் மிகத் தீவிரமடைந்து வன்முறையாக வெடிக்குமளவிலான சூழலே காணப்படுகின்றது. இதனைவிடவும், சிறிலங்கா அரசாங்கம், தனது கடல்வளத்தையும், கடற்பரப்பினையும், பாதுகாத்தல், மற்றும் சட்ட விரோத மீன்பிடியைத் தடுத்தல் என்ற அடிப்படையில் மிகத் தீவிரமான செயற்பாடுகளில் இறங்கியுள்ளன.

குறிப்பாக, தாயகத் தமிழர்களுக்காக கடற்படையே செயற்படுகின்றது என்ற தோற்றப்பாட்டை உருவாக்கும் சூட்சுமமான நிகழ்ச்சி நிரலொன்றையும் கடற்படை கொண்டிருக்கின்றது. மறுபக்கத்தில் சிறிலங்காவின் கடற்றொழில் அமைச்சராக இருப்பவர் டக்ளஸ் தேவானந்தா.

இவரும் வடக்கினைச் சேர்ந்தவர் இந்தியாவுடனும் உறவு-களைக் கொண்டிருப்பவர். அவ்விதமான ஒருவரிடத்தில் அமைச்சுப்பொறுப்பை கையளித்தன் மூலமாக, தமிழர்களுக்கு இடையில் மோதலை உருவாக்கி, அதனை கையாளும் பொறுப்பினையும் தமிழர்களிடத்திலேயே வழங்கி விட்டு வேடிக்கை பார்க்கின்றது கோட்டாபய அரசாங்கம்.

இதன்மூலம், தமிழர்கள் தேசிய விடயங்களில் இருந்து முழுமையாக திசை திருப்பபட்டு, தமது தொப்புள்கொடி உறவுகளுடன் முட்டி மோதிக்கொண்டு காலத்தினை கடத்தி விடுவார்கள் என்பது தான் ராஜபக்ஷ அரசாங்கத்தின் அரசியல் தந்திரம்.

இந்த தந்திரத்திற்கான செயற்பாடுகள் ஏறக்குறைய ஓரளவிற்கு வெற்றி பெற்றிருக்கின்றது என்று தான் சொல்ல வேண்டியுள்ளது. ராஜபக்ஷ அரசாங்கம் பதவியேற்று மூன்று வருடங்களாகின்ற நிலையில் தாயக, தமிழக கடற்றொழிலாளர்களுக்கு இடையிலான முரண்பாடுகள் மிகத் தீவிரமடைந்துள்ளன.

இருதரப்பு கடற்றொழிலாளர்களும் ஒருதரப்புக்கு மறுதரப்பு எதிர்ப்புக்களை வெளியிட்டு மிகத் தீவிர மான தொடர் போராட்டங்களை நடத்துமளவிற்கு நிலைமைகள் சென்றுள்ளன. அதுமட்டுமன்றி, தத்தம் நாட்டு கடற்படைகளின் உதவியுடன் ஒருதரப்பினை மறுதரப்பு பழிவாங்கும் வகையில் சில நடவடிக்கைகளையும் முன்னெடுக்கின்றன.

குறிப்பாக, கடற்றொழிலுக்கு போகும்போது ஆங்காங்கே காணப்படும் படகுகள் தொடர்பில் தகவல்களை வழங்கி கடலில் வைத்து கைதுகள், மற்றும் மோதல்கள், பரஸ்பர தாக்குதல்கள் உள்ளிட்ட நிகழ்வுகளை தொடர்ச்சியாக அரங்கேற்றி வரும் சூழல்களே அண்மைய நாட்களில் அதிகம் காணப்படுகின்றன.

இந்த நிலைமையானது, இருதரப்பும் தொப்புள் கொடி உறவுகள் என்பதை மறந்து பரஸ்பரம் ஒன்றையொன்று பழிதீர்த்து விட வேண்டும் என்று ஜென்ம பகையாளிகள் போன்று நடந்து கொள்ளுமளவிற்கு நிலைமைகள் உக்கிரமடைந்துள்ளன.

இவ்வாறிருக்க, 1974ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், இந்தியாவினால் கச்சதீவு இலங்கைக்கு கையளிக்கப்பட்டது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் கச்சத்தீவு பகுதிக்கு தமிழக கடற்றொழிலாளர்கள் போகவும் கூடாது, தொழிலில் ஈடுபடவும் கூடாது, அந்தோணியார் திருவிழாவுக்கும் மக்கள் போகக்கூடாது என்று இந்தியாவினால் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

எனினும், கச்சதீவு கையளிப்பின் பின்னர் இருதரப்பு கடற்றொழிலாளர்களுக்கும் இடையில் பிரச்சினை ஆரம்பமாகிவிட்டது. ஆரம்பத்தில் சிறிது சிறிதாக இருந்து வந்த பிரச்சினை இப்போது அதியுச்சத்தில் உள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டில் மட்டும், தமிழக மீனவர்கள் மீது 19 தடவைகள் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். 5மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அதேநேரம், தாயகத்தரப்பிலும் சமமான பதிப்புக்கள் நிகழ்ந்துள்ளன.

யாழ். சுப்பர்மடம் கடற்பகுதியிலிருந்து படகில் தண-ிகைமாறன், பிரேம்குமார் என்ற இரண்டு கடற்றொழிலாளர்கள் ஜனவரி 27 இல் கடலுக்குச் சென்றனர். மறுநாள் கரை திரும்ப வேண்டிய இரண்டு மீனவர்களும் வரவில்லை.

இதையடுத்து சுப்பர்மடம் கடற்பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள், மாயமான இரண்டு மீனவர்களையும் தேடினர். அப்போது இரண்டு கடற்றொழிலாளர்களும் பயன்படுத்திய வலைகள் சேதப்படுத்திய நிலையில் நடுக்கடலில் கண்டெடுக்கப்பட்டது. இந்த நிலையில், இரண்டு கடற்றொழிலாளர்களின் உடல்கள் அடுத்தடுத்து வடமராய்ச்சி கடற்பகுதியில் ஒதுங்கியது.

அந்த மீனவர்கள் இந்திய தமிழ்நாட்டு கடற்றொழிலாளர்களாலேயே நடுக்கடலில் வைத்து தாக்கப்பட்டிருக்க வேண்டும் என்று குற்றம்சாட்டி சுப்பர்மடம் உட்பட வடமராட்சி கடற்றொழிலாளர்கள் போராட்டத்தினை ஆரம்பித்தனர்.

இந்தப்போராட்டம் தீயாய் பரவிக்கொண்டது. யாழ். மாவட்ட செயலகம், ஆளுநர் அலுவலகம் என்பனவும் முற்றுகையிடப்பட்டன. விடயதானத்திற்கு பொறுப்பான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நிலைமைகளை கையாள முடிவில்லை.

கையெழுத்து மூலம் உறுதிப்பாட்டைக் கோரிய கடற்றொழிலாளர்கள் மீது சீறிப்பாய்ந்தார் அமைச்சர் டக்களஸ். அது அவருடைய பலவீனத்தினை வெளிப்படுத்தியது. இருப்பினும், கையெழுத்து உறுதிப்பாட்டால் எந்த விதமான பயனுமில்லை என்று வாதிட்டார்.

கூட்டமைப்பு, கல்முனை தமிழ் பிரதேச செயலாளர் பிரிவு குறித்து பெற்ற கையெழுத்து உறுதிப்பாடே நடைமுறைச் சாத்தியமாகாத நிலையில் அவ்விதமான காகிதங்களால் பயனில்லை என்று கூறி தனது அரசியல் எதிரி-களையும் சேர்த்து தாக்கினார்.

ஆனால், முல்லைத்தீவில் வலிந்து காணாமலாக்கப் பட்டவர்களை ஜனாதிபதி கோட்டாவுடன் சந்திக்கச் செய்து பிரச்சினைகளை முடிப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்கின்றேன் என்று தான் வழங்கிய வாக்குறுதிகள் இன்று ஓராண்டைக் கடந்தும் அப்படியே உள்ளது என்பதை அமைச்சர் டக்ளஸ் மறந்து விட்டார்.

இதனிடையே ஏட்டிக்குப் போட்டியாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வடமராட்சியில் கடற்றொழிலாளர்கள் போராட்டத்தில் பங்கெடுத்தன. ஈற்றில் மீனவர்களின் நியாயமான போராட்டத்திற்கு அரசியல் சாயம் அடிக்கப்பட்டு நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டு நலிந்து போகச் செய்யப்பட்டது தான் விளைவு.

தற்போதும் கூட தமிழக கடற்றொழிலாளர்கள் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அதற்கு எதிர்ப்பு வெளியிட்டு இராமேஸ்வர கடற்றொழிலாளர்கள் போராட்டத்தினை முன்னெடுத்துள்ளனர். இன்னமும் இழுவைப்படகுகள் சிறிலங்கா கடற்பரப்பில் அவ்வப்போது தென்படுவதாக தாயக மீனவர்கள் குறிப்பிடுகின்றனர்.

தமிழகத்தில் உள்ள சிறிலங்கா உயர்ஸ்தானிகர் வெங்கடேஸ்வரன் ஏற்பாட்டில் கடற்றொழிலாளர்கள் சங்கத்துக்கும், அமைச்சர் டக்ளஸ் உட்பட வட மாகாண கடற்றொழிலாளர்கள் சங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டாலும் தீர்க்கமான முடிவுகள் எதுமில்லை.

தமிழக முதலமைச்சர் ஸ்டாலினின் பிரதிநிதியாக ரி.ஆர். பாலு அமைச்சர் டக்ளஸ்/டன் பேச்சுக்களை நடத்தியபோதும் கூட முன்னேற்றங்கள் எதுவுமில்லை. தமிழகத்தைப் பொறுத்தவரையில் தற்போது உள்ளாட்சித் தேர்தல்காலம். ஆகவே கடற்றொழிலாளர்கள் விவாகரம் என்பது தற்போது இரண்டாம் பட்சமானது தான்.

அதேநேரம், சிறிலங்கா, இந்திய அரச மட்டங்கள் இந்த விடயத்தினை பெரிதாக அலட்டிக்கொண்டதாக இல்லை. ஆனால் இந்தியத் தரப்பு கைது செய்யும் தனது நாட்டு பிரஜைகளை சிறைமீட்டு மீண்டும் தமிழகம் அனுப்புவதற்கான நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முனைப்புடன் செய்து வருகின்றது.

சிறிலங்கா, இந்தியா அரசுகள் இந்த விடயத்தில் தீர்மானத்தினை எடுக்கப்போவதில். அதேநேரம் அமைச்சர் டக்ளஸோ அல்லது முதலமைச்சர் ஸ்டாலினோ இந்த விடயத்தில் முடிவுகளை எட்டவும் முடியாது. அதிகாரிகள் இந்த விடயத்திற்கான தீர்வினை 'திட்டவரைவாக' கூட முன்வைக்க முடியாது.

ஆக, தாயக, தமிழக கடற்றொழிலாளர்களின் முறுகல்களை முடிவுக்கு கொண்டு வருவதாக இருந்தால், தற்போதைக்குள்ள ஒரேதெரிவு இருதரப்பு கடற்றொழிலாளர்களையும் பேச்சுவார்த்தை செய்து முடிவுக்கு வர வைப்பது தான். தொப்புள் கொடி உறவுகளுக்கு இடையில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கு மூன்றாம் தரப்பின் தலையீடு தேவையில்லை. அவசியமும் இல்லை.

அதேநேரம் இருதரப்பும் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு மிகக் கிட்டிய காலத்தில் உரிய இடமாக இருப்பது, கச்சதீவு தான். கச்சதீவு அந்தோனியாருக்கு, எதிர்வரும் 11ஆம் 12ஆம் திகதிகளில் திருவிழா நடைபெறவுள்ளது. இந்த திருவிழா தொப்புள் கொடி உறவுகளின் எதிர்கால பெருவிழாவாக மாற வேண்டும்.

ஆனால், கொரோனாவைக் காரணம் காட்டி, வெறும் 500 தாயகத்தினருக்கு மட்டும் தான் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தமிழக, மற்றும் இந்தியத் தரப்பினருக்கு அனுமதி இல்லை. ஆனால் தமிழக, இந்தியத் தரப்பினால் திருவிழாவில் கலந்து கொள்வதற்கான கோரிக்கைகள் குறித்து சிறிலங்காவின் உயர்மட்டம் ஆராய்கிறது.




நமது ஈழநாடு
www.namathueelanadu.com
குரல் 02 மலர் 20 பெப்ரவரி 2022 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com

# குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டும் தமிழ்த் தரப்புக்கள்

விடுதலைக்காக போராடிக்கொண்டிருக்கும் ஒரு இனத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தி தம்மை தமிழ்த் தேசிய அரசியல் சக்திகளாக, பற்றாளார்களாக காண்பித்துக்கொண்டிருக்கும் தமிழ்த் தரப்புக்கள் அண்மைய நாட்களில் குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டிக்கொண்டிருக் கின்றன.

குறிப்பாக, பிரதமர் மோடிக்கு அறுகட்சிகளின் ஏழு தலைவர்கள் கூட்டாக இணைந்து கடிதம் அனுப்பினர். பின்னர் அதில் உள்ளட ஒவ்வொரு பந்திகளுக்கும் உரிமைகளை ஒவ்வொருவராக கோரினார்கள். இந்த உரிமை கோரல்கள் சந்தி சிரிக்கும் அளவிற்கு போய்விட்டது.

பின்னர், அந்தக்கடிதத்தின் உள்ளடக்கம் ஒற்றையாட்சிக்குள் 13ஆவது திருத்தச்சட்டத்தினை மட்டுமே கொண்டிருப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கண்டுபிடித்தது.

தமிழ் மக்களை ஏற்கச் செய்வதற்கான மேற்குல, இந்திய, சிறிலங்கா அரசாங்கத்தின் கூட்டு முயற்சியின் வெற்றி என்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விமர்சித்தது. அதனை பிரசாரம் செய்தது

பதிலுக்கு பிரதமர் மோடிக்கான கடிதத்தில் கையொப்பமிட்ட தலைவர்கள் கூட்டாக முன்னணிக்கு பதிலளிப்பதற்கு ஊடகவியலாளர்கள் மாநாட்டினை நடத்தினார்கள்.

அதன்பின்னர் முன்னணி தீவிரமாக செயற்பட ஆரம்பித்தது. தமிழர்களின் தேசம் அங்கீகரிக்கப்பட வேண்டும். 13ஆவது திருத்தச்சட்டத்தினை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை முன்னிலைப்படுத்தி போராட்டத்தினை நடத்தியது.

போராட்டம் வெற்றியா தோல்வியா என்பதற்கு அப்பால் அந்தப்போராட்டத்திற்கு பதிலடி வழங்குவதற்காக ஆறுகட்சிகளின் தலைவர்கள் விளைந்தார்கள். இதனால் கடந்த 16ஆம் திகதி நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில், 'ஈழத்தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வும் தேசிய, பிராந்திய, சர்வதேச நிலவரங்களும்' என்ற தலைப்பில் கருத்தரங்களை நடத்தின.

ஆனால், இந்தக் கருத்தரங்கில் கையொப்பமிட்ட ஒருகட்சியான இலங்கை தமிழ் அரசுக்கட்சி பங்கேற்றிருக்கவில்லை. அக்கட்சி கையொப்பமிட்ட கூட்டுப்பொறுப்பினை மறந்து கருத்தரங்கை தவிர்த்து அதே தினத்தில் யாழில் நடைபெற்ற பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு எதிரான கைழுத்துப்போராட்டத்திற்கே முன்னுரிமை அளித்திருந்தது.

இவ்விதமான வெளிப்பாடுகளுக்கு ஒவ்வொரு கட்சிக்கும், அதனை பிரதிநிதித்துவம் செய்கின்றவர்களுக்கும் காணப்படுகின்றன 'சுயமுனைப்பு' மனோநிலையே தவிர, வேறெதுவும் இல்லை.

இந்த சுயமுனைப்பு மேலோங்கி இருக்கையில், இனத்தின் விடுதலை என்பது கேள்விக்குறியாகும். ஆக்கிரமிப்புக்கள், அடக்குமுறைகள்,சித்திரவதைகள், துன்புறுத்தல்கள், இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான தீர்வு, தேசிய இனப்பிரச்சினைகான தீர்வு, அதிகாரப்பகிர்வு, முழுமையான தீர்வு என்று அனைத்துமே கிடப்பில் தான் இருக்கும்.

முன்னோக்கிய முன்னகர்த்தல்களை, தனிநபர்களின் 'சுயமுனைப் புக்கள்' நிச்சயமாக தொடர்ந்தும் தடுத்துக்கொண்டே இருக்கும். அவ்வாறான நிலையில், தமிழ் மக்கள் எதிர்கொள்கின்ற அன்றாடப்பிரச்சினை முதல் தேசிய பிரச்சினை வரையில் எந்தவொன்றுக்கும் தீர்வினை எட்டுவது என்பதற்கு அப்பால் தடுத்து நிறுத்துவதற்கு இயலாது போகும்.

ஆகவே, போர் முடிந்து 13ஆவது ஆண்டுமாகியுள்ள நிலையில், ஆகக்குறைந்தது, தமிழ் மக்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அடையாளமிட்டு அவற்றுக்காக 'பொது குறைந்தபட்ச நிலைப்பாடுகள்' (ஊழஅஅழெ ஆiniஅரஅ ளுவயனௌ) என்ற அடிப்படையிலாவது ஒன்றிணைவது, அல்லது ஒருங்கிணைவதுதான் சாலப்பொருத்தமானது.

இதனை அரசியல் கட்சிகளும், பிரதிநிதிகளும் புரிந்துகொள்வதற்கு அப்பால் வாக்களிக்கும் தமிழ் மக்கள் வலுவாக உள்ளீர்த்துக்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயம்.

# பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்து செய்யவேண்டும்

## சர்வதேச மன்னிப்புச் சபை




பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்து செய்யுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை மீண்டும் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

தற்காலிக அடிப்படையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 43 ஆண்டுகள் கடந்துள்ளதாக சுட்டிக்காட்டி அதனை இரத்துச் செய்யுமாறு கோரியுள்ளது.


சிறுபான்மை மக்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மாற்று கருத்துக்களை வெளியிடுவோர் உள்ளிட்டோரை அடக்குமுறைக்கு உட்படுத்தவும் துன்புறுத்தவுமே இந்த சட்டத்தை இலங்கை அரசாங்கம் பயன்படுத்துகின்றது என அது மேலும் கூறியுள்ளது.

இந்த சட்டத்தில் திருத்தங்களை செய்வதாக அரசாங்கம் உறுதிமொழி வழங்கியுள்ள போதிலும், உத்தேச திருத்தங்கள் இலங்கையின் அரசியல் சாசனத்திற்கும், சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கும் அமை-வானதாக இல்லை எனவும்இ இந்த உத்தேச திருத்தங்களினால் மனித உரிமைகளை பாதுகாக்க முடியாது எனவும் மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே குறித்த சட்டத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

இதேவேளை பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக்கோரி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடளாவிய ரீதியில் கையெழுத்து போராட்டம் ஒன்றினை முன்னெடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## மறைந்த காட்டூனிஸ்ட் அஸ்வினின் தீர்க்கதரிசன கருத்தோவிய தொகுப்புகளிலிருந்து...





# முன்னணியின் ‘பரிதாபநிலை’

-தாயகன்-

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைமையானது தற்போது பரிதாபமாகியுள்ளது. குறிப்பாக, தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ‘தனி நாட்டுக்காக’ போராடவில்லை என்று முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் பகிரங்க வெளியில் கருத்து வெளியிட்டிருந்தார்.

கஜேந்திரனின் கருத்தினை கனகச்சிதமாக பிடித்துக் கொண்டவர் ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன். இதனால் செல்வராஜா கஜேந்திரனின் ‘தலை’ உருண்டு கொண்டு இருக்கின்றது.

அவர் உடனடிப் பதற்றத்தினைத் தவிர்ப்பதற்காக ‘தன்னிலை விளக்க அறிக்கையை’ வெளியிட்டபோதும் மாற்றங்கள் நிகழவில்லை. மாறாக ஏமாற்றங்களே நிகழ்ந்து கொண்டிருகின்றன.

முன்னதாக கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு தெரிவு செய்யப்பட்ட ஆசனம், மற்றும் தேசியப்பட்டியல் ஆசனம் உள்ளடங்கலாக இரண்டு ஆசனங்களைப் பெற்றிருந்தது தமிழ்த் தேசிய முன்னணி.

இந்த இரண்டு ஆசனங்களைப் பெறுவதற்கு முன்னணிக்கு பத்து ஆண்டுகள் தேவைப்பட்டிருந்தன. மிகக் கடுமையான உழைப்பும் அவசியமாகியிருந்தது.

அவ்வாறான, நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளராக இருந்த விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையிலான அணியொன்று புரட்சிகரமாக வெளியேறியது.

தேர்தல் நிறைவடைந்த கையோடு ஏற்பட்டிருந்த இந்த உடைவு முன்னணியை மிகக் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாக்கியிருந்தது. அதேநேரம், தற்போது யாழ்.மேயராக இருந்து வரும் மணிவண்ணன், தமிழ்த் தேசிய முன்னணிக்கு இன்னமும் உரிமை கோரிவருகின்றமையும் முக்கியமானதொரு விடயம்.

இவ்வாறிருக்க, மணி அணியின் உடைவினை ஒருவாறு சீர் செய்துகொண்டு முன்னணிக்கு அடுத்தடுத்து இரண்டு தலையிடிகள் இந்தியவுடன் தொடர்பு பட்டு ஏற்பட்டிருந்தது.

அதில், முதலாவது, இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு எதிரான முன்னணியின் ‘சவப்பெட்டி’ பிரசாரமும் திலீபனின் நினைவுத் தூபியில் இருந்து கிட்டு பூங்கா வரையிலான போரணியும் தான்.

இலங்கை, இந்திய அரசாங்களுக்கு எதிராக

- மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.
- சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.
- அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும்.
- ஊர்காவல்படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.
- தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும்.

ஆகிய ஐந்தம்சக் கோரிக்கைளை முன்வைத்து அறவழியில் போராடி தன்னுயிரை ஈய்த்தவர் திலீபன். திலீபனின் இந்தக் கோரிக்கைகள் இன்றும் நீறுபூத்த நெருப்பாக நீடித்துக்கொண்டிருக்கின்றன என்பது வேறு.

அதேபோன்று, 80களில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் களமிறங்கிய போராளிகளில் தனித்துவம் பெற்றவர் கிட்டு. இவருடைய போர்கள செயற்பாடுகளும், அரசியல் ரீதியான நகர்வுகளும் அக்காலத்தில் ‘கிட்டு ஒரு நாயகன்’ அந்தஸ்தில் இருந்தார். இவர் 1993இல் குவேக்கர்ஸின் சமாதானச் செய்தியுடன் சர்வதேச கடற்பரப்பினூடாக எம்.வி அகத் என்ற கப்பலில் தமிழீழம் திரும்புகையில் இந்தியக் கடற்படையால் சுற்றி வளைக்கப்பட்ட போது கப்பலை வெடிக்க வைத்து தன்னைத்தானே ஈகம் செய்தார்.

இந்த இருவரின் மரணங்களுக்கும் இந்தியாவுக்கும் தாராளமான தொடர்புகள் உள்ளன. இந்நிலையில் தான், முன்னணி இந்த இருவரின் நினைவு இடங்களை தொடுத்து இந்தியாவின் தலையீட்டில் சிறிலங்கா அரசியலமைப்பில் உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு எதிராக போராட்டத்தினை முன்னெடுத்திருக்கின்றது.

அந்த வகையில், முன்னணியின் இந்தப் போராட்டம் ஒட்டுமொத்த இந்தியாவின் வெளிப்பாடு என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த நிலைமையானது இந்தியாவுக்கும், முன்னணிக்கும் இருந்த உறவுகளை கசப்படையச் செய்திருக்கின்றன.

2009 மேயின் பிற்பகுதியில் சிறிலங்கா வந்திருந்த இந்தியாவின் அப்போதைய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் மற்றும் இராஜதந்திரி சிவ்சங்கர் மேனன் ஆகியோருடனான சந்திப்பின் போது ஏற்பட்ட கஜேந்திரகுமாருடனான முறுகல் கஜேந்திரகுமாரை கூட்டமைப்பிலிருந்து வெளியே(ற்) றுவதற்கு வித்திட்டிருந்தது.

இதன்பின்னர், இந்திய எதிர்ப்பு மனோநிலையில் இருந்த கஜேந்திரகுமார் உள்ளிட்ட ஒட்டுமொத்த முன்னணியினரும் ஒருகட்டத்தில் இலங்கை, இந்திய ஒப்பந்தத்தினை எதிர்க்கவில்லை. இந்தியாவின் தேசிய பாதுகாப்பு விடயத்தில் வேறெந்த சக்திகளுக்கும் தமிழர் தாயகத்தில் இடமளிக்க முடியாது என்பதில் உறுதியாக இருந்தனர்.

இது, முன்னணியிருக்கும், இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளை மீளப்புதிப்பித்து இருந்தது. ஆனால், முன்னணியின் 13இற்கு எதிரான போராட்டம் அதனை சீர்குலைத்து விட்டது.

இதனை, நன்குணர்ந்து கொண்ட முன்னணியினர் அதனை உடனடியாகவே சீர் செய்ய விரும்பினார்கள். ஏனென்றால், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் சிறிலங்கா விஜயம், பிரதமர் மோடியின் சிறிலங்கா விஜயம் என்று அடுத்தடுத்து நிகழ்ச்சி நிரலிடப்பட்டுள்ளது.

அப்போது, தம்மையும் ஒருதரப்பாக கருதி பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும் என்பது முன்னணியினரின் நிலைப்பாடு. இவ்விதமான ஒரு சூழலில் இந்தியாவுடன் உறவுகளை உடனடியாக மீளமைத்துக்கொள்ள முன்னணி அவசரப்பட்டதில் நியாயமுள்ளது.

ஆனால், அந்த அவரசத்தில் முன்னணி மீண்டும் ‘போட்டுடைத்துவிட்டது’. ஆம், இம்மாதத்தின் 8ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரையில் நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வுக்காலத்தில் முன்னணி, பற்றி எரிந்து கொண்டிருக்கும் சிறிலங்கா, இந்திய கடற்றொழிலாளர்கள் விவகாரம் தொடர்பாக ஒரு ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையை கொண்டு வருவதற்கு திட்டமிட்டிருந்தது.

எனினும், இறுதிநேரத்தில் அந்த ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையை முன்னணி கைவிட்டது. கைவிட்ட கையோடு, சிறிலங்காவுக்கான இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் உயர் அதிகாரியொருவரின் வேண்டு கோளினால் தான் ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையை கைவிட்டதாக முன்னணி அறிவித்தது.

அதுமட்டுமன்றி, குறித்த அதிகாரி, இரு நாட்டு கடற்றொழிலாளர்களின் விவகாரத்தினை விரைவில் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கூறியதாகவும் முன்னணி அறிவித்து.

இந்த அறிவிப்பு மூலம் முன்னணி, இந்தியத் தரப்பு தம்முடன் தொடர்பில் உள்ளது என்பதையும், தாம் இந்தியா கூறினால் மீறிச் செல்ல மாட்டோம் என்ற விடயத்தினையும் நிறுவுவதற்கு முனைந்திருந்தது.

ஆனால், முன்னணியின் இந்த அறிவிப்பால் இந்திய இராஜதந்திர தரப்பு சினமடைந்து விட்டது. இராஜதந்திர மட்டங்களில் பேசப்படும் விடயங்களை அப்படியே பச்சையாக வெளிப்படுத்தி தமக்கு சிக்கலை ஏற்படுத்தி விட்டது முன்னணி என்றே இந்தியத் தரப்பு கருதுகின்றது.

அதாவது, இந்தியா, சிறிலங்காவின் நாடாளுமன்ற நகர்வுகளில் கூட ‘செல்வாக்குச்’ செலுத்துகின்றது என்பது தான் அதன் பொருள். இது ‘ஜனநாயகம்’ பற்றி அதிகம் பேசும் பிராந்திய தலைமை நாடான தமக்கு பலத்த விமர்சனத்தினைத் தரும் என்பதே இந்தியாவின் அதிருப்திக்கு காரணம்.

இதுவொருபுறமிருக்க, முன்னணியில் உள்ள சட்டத்தரணிகளான காண்டீபன், சுகாஸ் ஆகியோருக்கு இடையிலான வடமாகாண முதலமைச்சர் வேட்பாளருக்கான போட்டி பனிப்போராக மாறியுள்ளது.

இந்நிலையில், இந்திய, இலங்கை ஒப்பந்தத்தினை ஏற்கும், மாகாண சபை முறைமையை ஏற்கும் முன்னணி 13ஐ எதிர்பதாக கூறுவது அவர்களின் கொள்கைகளின் பிராகரம் முரண்நகைகளைக் கொண்டுள்ளது என்ற தர்க்கம் காட்டுத்தீயாகியுள்ளது.

மறுபக்கத்தில், கஜேந்திரகுமார் முன்னணியின் தலைவரே தவிர அவருக்கு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸில் தொடர்பில்லை நானும் முன்னணி உறுப்பினர். கஜேந்திரன் முன்னணியின் பொதுச்செயலாளர் என்று ‘வக்கீல் வண்டு முருகன்’ என்ற பாத்திரம் தரித்த வடிவேலு போன்று சட்டத்தரணி சுகாஸ்ம் ஒரு கதைவிட்டிருக்கின்றார்.

ஆனால், கடந்த தேர்தலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என்ற கட்சியில் தான் தேர்தலில் போட்டியிட்டேன். அந்த வேட்பாளர் மனுவிற்கான கையொப்பத்தினை அதன் செயலாளர் நாயகம் கஜேந்திரகுமாரே இட்டிருக்கின்றார் என்பதை சுகாஸ் மறந்து விட்டார்.

தமிழ்த் தேசியப் பற்றில் விடுதலைப்புலிகளுக்கு அடுத்ததாக தமே என்று காட்டிக்கொண்டும், ‘ஒருநாடு, இரு தேசம்’ என்ற கொள்கையைக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது உறுப்பினர்களில் நிதானமற்ற பேச்சுக்களால் ஆரம்பித்திருக்கும் தலையிடி தொடர்ந்து தலைகள் உருளாது விட்டால் சரி.



# இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவிற்கு எதிராக தொடரும் புலம்பெயர் தமிழர்களின் நகர்வு

இலங்கையின் இராணுவத்தளபதி சவேந்திர சில்வா உள்ளிட்ட போர்க்குற்ற வாளிகளை பிரித்தானியாவின் உலகளாவிய மனித தொடர்பான தடை விதிப்பு அதிகார சபையின் கீழ் (Global Human Rights Sanction Regime) தடை செய்வதற்கு பிரித்தானிய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி பிரித்தானிய புலம்பெயர் தமிழர்கள் இராஜதந்திர நடவடிக்கை ஒன்றினை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றனர்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் பல்லாயிரம் அப்பாவி தமிழ் மக்கள் கொல்லப்பட்டதற்கு காரணமான 58 ஆவது படைப்பிரிவிற்கு தலைமை தாங்கி இராணுவத்தை நேரடியாக வழி நடத்திய சவேந்திர சில்வாவை தடை செய்ய போதுமான ஆதாரங்களை யஸ்மின் சூக்கா தலைமையிலான சர்வதேச உண்மை மற்றும் நீதித்திட்டம் (ITJP) வெளியிட்டிருந்தது. அதனை பிரித்தானிய வெளிவிவகார அமைச்சுக்கு சமர்ப்பித்திருந்தது. ஆனால் இதுவரையிலும் எவ்வித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இறுதி யுத்தத்தில் காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் சித்திரவதைக்குள்ளாக்கட்டமை தொடர்பில் சவேந்திர சில்லாவவே முழுமையாக அறிந்திருக்கவேண்டும். அவரது வழிநடத்தலில் கீழ் உள்ள இராணுவமே பல்லாயிரம் அப்பாவி தமிழர்களை கொன்றதுடன் பின்னர் கடத்தல் சித்தரவதைகளையும் மேற்கொண்டது.

இந்நிலையில் தான் ITJP வெளியிட்டுள்ள ஆதாரங்களை கொண்டு உலகளாவிய மனித தொடர்பான தடை விதிப்பு அதிகார சபையின் கீழ் சவேந்திர சில்வா உள்ளிட்ட போர்க்குற்றவாளிகளை தடைசெய்ய பிரித்தானிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென புலம்பெயர் தமிழர்கள் இராஜதந்திர நடவடிக்கை ஒன்றினை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்தவகையில் பிரித்தானியாவின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் இது தொடர்பிலான தொடர் சந்திப்புக்களை மேற்கொண்டுவருகின்றனர். அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் நேரடியாக இந்த விடயத்தை கொண்டு சேர்க்கும் பட்சத்தில் அதனை பாராளுமன்ற விவாதத்திற்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இதில் தமிழர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் இரண்டாம் தலைமுறையினர் என பலர் கலந்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழுத்தங்களை தெரிவித்துவருகின்றனர்.

இந்நிலையில் அண்மையில் நடைபெற்ற பிரித்தானிய தொழிற்கட்சியினரின் இரவுநேர உணவு ஒன்று கூடலில் கலந்து கொண்ட செயற்பாட்டாளர்கள் அங்கு வருகை தந்திருந்த தொழிற்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாக்கு எதிரான தடையை அரசிடம் வலியுறுத்துமாறு கோரிக்கை விடுத்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் Siobhain McDonagh MP தலைமையில் பிரித்தானிய ஆழசனநெ நகரில் நடைபெற்ற மேற்படி தொழிற்கட்சியின் இரவுநேர உணவு ஒன்றுகூடலில் பிரதம விருந்தினர்களாக பிரித்தானிய சுகாதார மற்றும் சமூக பாதுகாப்புக்கான நிழல் அமைச்சர் Wes Streeting MP, தொழிற்கட்சியின் பொதுச் செயலாளர் David Evans MP, Mitcham மற்றும் Morden கவுன்சிலின் தலைவர் Mark Alison ஆகியோர் கலந்து கொண்டதுடன் தொழிற்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.





தொழிற்கட்சிக்கான தமிழர்கள் அமைப்பின் (Tamil For Labour) தலைவர் திரு சென் கந்தையா தலைமையில் செயற்பாட்டாளர்களான விஜய் விவேகானந்தன், கபிலன் அன்புரெத்தினம், நிலக்ஜன் சிவலிங்கம், பிரசன்னா பாலசந்திரன், சிதம்பரசுப்ரமணியன் திருச்செந்திநாதன், சைலேசன் சித்தம்பரநாதன், விதுரா விவேகானந்தன், மயூரன் கிருபானந்த மநுநீதி, சசிகரன் செல்வசுந்தரம் மற்றும் அஜிபன் ராஜ் ஜெயந்திரன் ஆகியோரே கந்து கொண்டு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கையை விடுத்துள்துள்ளனர்.

குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தாம் இராணுவத்தினரால் எவ்வாறு துன்புறுத்தப்பட்டோம் என்ற நேரடி சாட்சியங்களை கூறிய செயற்பாட்டாளர்கள் இராணுவத்தளபதிக்கு எதிரான தடையை பெற்றுத் தருவதன் மூலம் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்தக்குற்றங்களுக்கு நீதி கிடைக்க உறுதுணை வழங்குமாறும் கோரியுள்ளனர்.

இதேவேளை சவேந்திர சில்வாக்கு தடையை பெற்றுக்கொடுக்க சர்வதேச ஆதரவை திரட்டும் நோக்கில் இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்த தமிழ் இளையோர் இணைய வழி கையெழுத்து போராட்டம் ஒன்றையும் செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே பிரித்தானிய அரசிற்கு பெரும் அழுத்தமாக மாறிக்கொண்டிருக்கும் தமிழர்களின் மேற்படி நடவடிக்கையினால் இராணுவத்தளபதி சவேந்திர சில்வா உள்ளிட்ட போர்க் குற்றவாளிகளை பிரித்தானியா தடைசெய்யுமானால் அது நீதிக்காகப் போராடிக்கொண்டிருக்கும் தமிழர்களுக்கு பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தும்.

# வடக்கு கிழக்கை சிதைக்க ஸ்ரீலங்கா அரசு சதி

## சுட்டிக்காட்டுகிறது தமிழ் தேசிய ஆய்வு அமையம்




புதிய அரசியலமைப்பு என்ற பெயரில் ஈழத் தமிழ் மக்களின் தாயகமான வடக்கு கிழக்கை சிதைக்க ஸ்ரீலங்கா அரசு மற்றொரு சதியை முன்னெடுத்து வருவதாக தமிழ் தேசிய ஆய்வு அமையம் தெரிவித்துள்ளது. ஸ்ரீலங்கா அரசின் இச் சதி நடவடிக்கை தொடர்பில் உலகத் தமிழர்கள் விழித்துக் கொள்ள வேண்டும் என்றும் நமது ஈழநாடு பத்திரிகையின் தமிழ் தேசிய ஆய்வு அமையம் எச்சரிக்கை விடுக்கிறது.

இது தொடர்பில் நமது ஈழநாடு பத்திரிகையின் தமிழ் தேசிய ஆய்வு அமையத்தின் அறிக்கை பின்வருமாறு.

### இனவழிப்புக் கருவி

ஸ்ரீலங்கா அரசியலமைப்பு ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. சிங்களப் பேரினவாத அரசின் தமிழ் இனப்படுகொலைகளுக்கு ஆதாரமாகவும் அடிப்படையாகவும் சட்டப் பாதுகாப்பாகவும் இவ் அரசியலமைப்பு காணப்படுகின்றது. 1950களில் இருந்து ஸ்ரீலங்கா அரசு அரசியலமைப்பு என்ற சட்ட அமைப்பு எனும் இனவழிப்புக் கருவியைப் பயன்படுத்தியே ஈழத் தமிழ் மக்களை இனவழிப்புக் கபளீகரம் செய்து வருகின்றது.

அரசியலமைப்பு வாயிலாக குடிமக்களின் உரிமைகள் உறுதிசெய்யப்பட வேண்டும். அத்துடன் அது ஜனநாயகம் மற்றும் விழுமியங்களையும் மனித உரிமைகளையும் மதிப்பளிக்கும் விதத்தில் அமைந்திருப்பதுடன் குடிமக்களின் ஆணையின் ஆதாரமாகவும் விளங்க வேண்டும். ஆனால் ஸ்ரீலங்காவைப் பொறுத்தவரையில் பெரும்பான்மை சிங்கள மக்களால் கொண்டுவரப்பட்ட ஸ்ரீலங்கா அரசியலமைப்பு ஈழத் தமிழ் மக்களை நசுக்கும் கொடிய ஆயுதமாக கையாளப்படுகின்றது.

### ஏமாறும் சர்வதேசம்

ஸ்ரீலங்காவில் ஆட்சியை கைப்பற்றும் அரசுகள், புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கி வருவதாகவும் அதன் வாயிலாக தமிழ் மக்களுக்கும் நாட்டின் இனப் பிரச்சினைக்கும் தீர்வு காணப் போவதாகவும் கூறி குறிப்பாக சர்வதேசத்தை ஏமாற்றும் நடவடிக்கையில் ஈடுபடுவதைக் கண்டு வருகின்றோம். இதேபோன்று கடந்த காலத்தில் மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆட்சியின் போது புதிய அரசியலமைப்பை உருவாக்கி தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணப் போவதாக சர்வதேசத்திற்கு வாக்குறுதி அளிக்கப்பட்டு அது பின்னர் காலத்தில் கரைந்துபோனது.

அதேபோன்று தற்போதைய கோட்டபாய - மகிந்த ராஜபக்ச அரசாங்கம் சர்வதேசத்தை ஏமாற்றி சர்வதேச அழுத்தங்களை குறைக்கவும் சர்வதேச நலன்களைப் பெறவும் புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கி வருதாகவும் தெரிவித்து வருகின்றது. தமிழ் மக்கள் பிரதிநித்துவத்தின் பங்குபற்றுதலும் தமிழ் மக்களின் கருத்துக்களும் உள்ளடக்காத இந்த அரசியலமைப்பு சர்வதேசத்தை ஏமாற்றவே உருவாக்கப்படுகின்றது.

**ஸ்ரீலங்கா அரசின் தற்போதைய அரசியலமைப்பே ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக அவர்களை இனவழிப்பு செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள நிலையில் புதிய அரசியலமைப்பு இனப்படுகொலை இன்னும் அதிகப்படுத்தும் நோக்கிலேயே உருவாக்கப்படுவதை எமது ஆய்வு அமையத்தின் சட்ட வல்லுனர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.**

### துண்டு துண்டாக வடக்கு கிழக்கு

தற்போது ஸ்ரீலங்கா அரசு உருவாக்கி வரும் புதிய அரசியலமைப்பில் வடக்கு கிழக்கை துண்டு துண்டாக சிதைக்க சதி இடம்பெற்று வருகின்றது. வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலையை மாற்றி அனுராதபுரத்தையும் வடக்கு மாகாணத்துடன் இணைத்து வடக்கில் சிங்களப் பேரினவாத ஆக்கிரமிப்பு அரசியலை நுழைக்க ஸ்ரீலங்கா அரசு திட்டம் தீட்டி வருகின்றது. இதனால் வடக்கு மாகாணத்தின் தமிழர் தனித்துவத்தை இல்லாமல் ஆக்கவும் ஸ்ரீலங்கா அரசு கங்கனம் கட்டியுள்ளது.

இதேவேளை ஏற்கனவே சிங்கள ஆக்கிரமிப்புக்கள் மூலம் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளை சிங்களப் பகுதிகளாக ஆக்கிரமித்துள்ள ஸ்ரீலங்கா அரசு, தற்போது கிழக்கு மாகணத்தை மேலும் துண்டு துண்டுகளாக உடைத்து சிங்கள மாவட்டங்களுடன் இணைத்து புதிய மாகாணங்களை உருவாக்க திட்டம் தீட்டியுள்ளதாகவும் அறியக் கிடைக்கிறது. இதன் படி கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்கள் உடைத்தெறியவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

### தமிழர் தாயக கோரிக்கை

ஈழத் தீவு முழுவதும் தமிழ் மக்கள் பரந்தும் செறிந்தும் வாழ்ந்த போதும் அந்நியப் படையெடுப்புக்களின் போது வடக்கு கிழக்கை தமிழர்கள் தனியாக தமது தாயகத்தை ஆட்சி செய்து வந்தனர். இந்த நிலையில் பிரித்தானிய வெளியேற்றத்தின் பின்னர் தமிழர்கள் தமது தாயகமான வடக்கு கிழக்கில் ஆட்சி செலுத்தும் உரிமையைக் கோரி பல்வேறு வகையான போராட்டங்களில் ஈடுபட்டு வந்துள்ளனர். ஜனநாயகப் போராட்ட வழியாக வடக்கு கிழக்கில் தமிழீழப் பிரகடனமும் செய்யப்பட்டமை வரலாற்று நிகழ்வுகளாகும்.

இதேவேளை வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தைப் பாதுகாக்க தமிழீழ விடுதலைப் புலிகள் இரத்தம் சிந்தி தாய் மண்ணில் தாம் உயிர்களை விதைத்துள்ளனர். முப்பது ஆண்டுகள் தமது தாயகத்தை பாதுகாக்க உயிர்களை தியாகம் செய்து உன்னதமான போராடத்தை நடாத்தியுள்ளனர். ஈழத் தமிழ் மக்களின் சமரசமற்ற கோரிக்கையாக வடக்கு கிழக்கு தாயக கோரிக்கை காணப்படுகின்றது. இதனை முள்ளிவாய்க்காலுக்குப் பிந்தைய காலத்திலும் ஈழ மக்கள் வலுவாகக் கோரி முழங்கி வருகின்றனர். இதன் காரணமாகவே வடக்கு கிழக்கு தாயகக் கோரிக்கையை புதிய அரசியலமைப்பில் சிதைக்க சிங்களம் சதி எண்ணம் கொண்டுள்ளது.

**சிங்கள ஆக்கிரமிப்புக்கள் மூலம் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளை சிங்களப் பகுதிகளாக ஆக்கிரமித்துள்ள ஸ்ரீலங்கா அரசு, தற்போது கிழக்கு மாகணத்தை மேலும் துண்டு துண்டுகளாக உடைத்து சிங்கள மாவட்டங்களுடன் இணைத்து புதிய மாகாணங்களை உருவாக்க திட்டம் தீட்டியுள்ளதாகவும் அறியக் கிடைக்கிறது. இதன் படி கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்கள் உடைத்தெறியவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.**

### தமிழீழ மாநிலம்

ஸ்ரீலங்கா அரசின் தற்போதைய அரசியலமைப்பே ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக அவர்களை இனவழிப்பு செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள நிலையில் புதிய அரசியலமைப்பு இனப்படுகொலை இன்னும் அதிகப்படுத்தும் நோக்கிலேயே உருவாக்கப்படுவதை எமது ஆய்வு அமையத்தின் சட்ட வல்லுனர்கள் உறுதிப்படுத்துகின்றனர். எனவே இதனை கடுமையான வகையில் எதிர்ப்பதுடன் முறியடிக்கும் வகையில் அறிவுபூர்வமாகவும் சட்ட ரீதியாகவும் சர்வதேச மட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தும் வகையிலும் செயற்பாடுகளை முன்னெடுப்பது நம் அனைவரதும் கடமையாகும்.

இதேவேளை கடந்த காலத்தில் மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் புதிய அரசியலமைப்பை உருவாக்க முயற்சி செய்தபோது வடக்கு கிழக்கில் கருத்தெடுப்பு முன்னெடுக்கப்பட்டது. இதில் கலந்து கொண்ட ஈழத் தமிழ் மக்கள் தமிழீழ மாநிலமாக வடக்கு கிழக்கு அரசியலமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தினர். எனவே வடக்கு கிழக்கு மக்களின் சுயநிர்யண உரிமையை ஏற்றுக்கொள்ளும் வகையிலான புதிய அரசியலமைப்பே இலங்கைத் தீவின் அமைதிக்கும் ஈழத் தமிழ் மக்களின் தியாகங்களுக்கும் தீர்வாக அமையும். அதனை ஏற்க மறுத்தால் தமிழீழமே தீர்வு என்பதைய சிங்களம் மீண்டும் மண்டும் உணர்த்துவதை உலகிற்கு அம்பலப்படுத்துவோம். அதற்கான உழைப்பை உலகத் தமிழர்கள் விழிப்போடும் எழுச்சியோடும் நல்க வேண்டும் என தமிழ் தேசிய ஆய்வு அமையம் வலியுறுத்தி நிற்கிறது.’

# கோதுமை மானியம்

## பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு

## "மீண்டும் ஒரு ஏமாற்றம்"

**ச.பார்த்தீபன்**

இலங்கை நிதியமைச்சர் பசில் ராஜபக்ச, தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதார நிலைமையை உணர்ந்து மாதாந்தம் ஒரு கிலோ 80 ரூபா என்ற அடிப்படையில் தலா 15 கிலோ கோதுமை மாவை நிவாரணமாக வழங்கப் போவதாக உறுதியளித்திருந்தார். மானிய விலையில் கோதுமை மாவை பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கான உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும், நுகர்வோர் விவகார இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, தோட்ட வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் கோதுமை மா நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின. எனினும் மக்களுக்கு கோதுமை மா மானிய விலையில் கிடைத்ததா? மலையக பெருந்தோட்ட மக்கள் எல்லா வகையிலும், இயலுமான அனைத்து வழிகளிலும் ஏமாற்றப்படுவது என்பது வழமையான விடயமாக மாறிப்போயுள்ள நிலையில் கோதுமை மாவை மானிய விலையில் வழங்கும் விடயத்தில் அதுவே நடந்தேறியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மானிய விலையில் கோதுமை மா வழங்குவதாக தெரிவித்து சம்பளத்தில் பணம் அறவிடப்பட்டாலும் இதுவரை கோதுமை மா கிடைக்கவில்லை என பசறை - கோணக்கலை மேற்பிரிவு தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஐம்பதிற்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் ஜனவரி மாத சம்பளத்தில் இருந்து மானிய விலையில் கோதுமை மாவை வழங்குவதற்காக பணம் அறிவிடப்பட்டுள்ளதாக கோணக்கலை மேற்பிரிவு தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். தோட்ட நிர்வாகத்தினால் 80 ரூபா என்ற ரீதியில் 15 கிலோகிராமிற்கு 1,200 ரூபாய் பணம் சம்பளத்தில் இருந்து அறவிடப்பட்டுள்ளதாக தெரிவித்த அந்த மக்கள் தமது மாதாந்த சம்பள சீட்டையும் அவர்கள் அதற்கு சான்றாக காண்பிக்கின்றனர். எனினும், இதுவரை தமக்கு கோதுமை மா கிடைக்கவில்லை என அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, பெப்ரவரி 5ஆம் திகதியிலிருந்து மானிய விலை அடிப்படையில் கோதுமையை பெற்றுக்கொள்ள முடியுமென கடந்த ஜனவரி 25ஆம் திகதி இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டான் தெரிவித்திருந்தார். எனினும் உறுதியளித்த அடிப்படையில் தமத்து இதுவரையில் தமக்கு கோதுமை மா கிடைக்கவில்லை என கேகாலை - தெரணியகல மக்கள் தெரிவிக்கின்றனர். "80 ரூபாவிற்கு மாவை தருவதாக சொன்னாங்க ஆனா இதுவரை எமக்கு கிடைக்கல. மா கிடைத்தால் இரண்டு நேரம் சமாளிக்க முடியும்." என தொழிலாளி ஒருவர் தெரிவிக்கின்றார். இதே வேளை, 80 ரூபாயக்கு எங்கும் கோதுமை மாவை பெற்றுக்கொள்ள முடியவில்லை என தலவாக்கலை - லிந்துலை தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். தம்மிடம் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளபோதிலும் கோதுமை மா இதுவரை கிடைக்கவில்லை என அந்த மக்கள் தெரிவிக்கின்றனர். இந்த நிலையில் பெருந்தோட்டங்கள் வழமையாக 150 ரூபாவிற்கே கோதுமை விநியோகிக்கப்படுவதாகவும் அந்த விலைக்கே இந்தத் தடவையும் மா விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் வழமையாக 10 கிலோ மா வழங்கப்படுகின்ற நிலையில் தற்போது 5 கிலோ மாத்திரமே கிடைக்கப்பெறுவதாகவும் அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான ஒரு சூழலில் தாம் கோதுமை மா விடயத்திலும் தாம் ஏமாற்றப்பட்டுள்ளதாக பெருந்தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த சூழலில், இதுத் தொடர்பில் கொழும்பின் ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள வர்த்தக அமைச்சர் பந்துல குணவரத்ன பெப்ரவரி 5 முதல் நிவாரண விலையில் கோதுமை மாவினை வழங்குவது சாத்தியமில்லை எனவும், அமைச்சரவை பத்திரம் ஒன்றை தாக்கல் செய்யவுள்ளதாகவும் குறிப்பிட்டதோடு, அதன் பின்னரே இதுத் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நிதியமைச்சர் ஒரு கருத்தையும், இராஜாங்க அமைச்சர் ஜீவன் ஒரு கருத்தையும், அமைச்சர் பந்துல ஒரு கருத்தையும் வெளியிட்டுள்ளனர். இந்த ஒட்டுமொத்த விடயங்களை பார்க்கையில், அரசாங்கத்தின் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் ஒருவருக்கொருவர் முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டுள்ள நிலையில், இறுதியில் ஏமாந்து நிற்பது தொழிலாளர்களே என்பது தெளிவாகின்றது. மக்கள் நலன் சார்ந்து தீர்க்கமான தீர்மானங்களை மேற்கொண்டு அதனை செயற்படுத்த வேண்டிய பொறுப்பான அரசாங்கத் தரப்பு மாறி மாறி கருத்துக்களை வெளியிடுவதானது மக்களை விசனத்திற்கே உள்ளாக்கியுள்ளது.

மலையக பெருந்தோட்ட மக்களை பொருத்தவரையில் இதுவொன்றும் புதிய விடயமல்ல. மாறி மாறி வாக்குறுதிகளை வழங்குவதும், பின்னர் அது நடைமுறைபடுத்தப்படாமல் போவதும் வழமையான ஒரு விடயமே. ஆயிரம் ரூபாய் அடிப்படை சம்பள விடயமாகட்டும், வீடமைப்பாகட்டும் அபிவிருத்திப் பணிகளாகட்டும் அனைத்து விடயங்களிலும் அந்த மக்களுக்கு ஏமாற்றமே எஞ்சியுள்ளது. காலங்காலமாக இந்த மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளில் ஒன்றாக "மானிய விலையில் கோதுமை"யும் மாறிப்போயுள்ளது.

ஏற்கனவே ஆயிரம் ரூபாய் சம்பளப் பிரச்சினையால் வருமானத்தை இழந்து, நாளாந்த வாழ்வை பெரும் சவாலுக்கு மத்தியில் நடத்திச் செல்லும் இந்த மக்கள் கோதுமை மா விடயத்திலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். கோதுமை மா மானிய விலையில் கிடைப்பதால் அவர்களின் பிரச்சினை தீர்ந்துவிடுமா? என்ற கேள்வி பலருக்கு எழலாம். எனினும் அந்த 15 கிலோ மாவின் பெறுமதி அந்த மக்களுக்கே தெரியும். நான்கு அல்லது ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பத்தின் ஒரு மாத உணவுத் தேவையின் பாதிக்கு மேல் இந்த கோதுமை மாவின் ஊடாக ஈடுசெய்ய முடியும். இதுதே நிதர்சனம். ஆகவேதான் அதனை உணர்ந்த அரசாங்கம் இந்த நிவாரண திட்டத்தை அறிவித்தது. எனினும் அதனை திட்டமிட்டு செயற்படுத்தாமையே இங்குள்ள பிரச்சினை.

அரசாங்கம் இந்தத் திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பில் கோதுமை மா நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி இறுதித் தீர்தமானத்தை எடுத்த பின்னர் மக்களுக்கு அறிவித்திருக் வேண்டும். அதனைவிடுத்து நிதியமைச்சர் வெறுமனே அறிவிப்பை விடுவதால் மாத்திம் அது மக்களின் கைகளை சென்றடைந்துவிடாது. கடந்த 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் அடிப்படைச் சம்பளம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. எவ்வித திட்டமிடலும் இன்றி இந்த அறிவிப்பு வெளியான நிலையில் இதுவரை அந்த மக்களுக்கு அந்த ஆயிரம் ரூபாய் சரியாக சென்றடையவில்லை. இந்த அறிவிப்பிற்கு எதிராக பெருந்தோட்ட நிறுவனங்கள் வழக்குத் தாக்கல் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான சூழ்நிலையில் கோதுமை மாவினை மானிய விலையில் வழங்குவது குறித்த அறிவிப்பும் இன்று அவ்வாறே பொய்யான வாக்குறுதியாக மாறிப்போயுள்ளது. அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்மைக்கு அமைய அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு, அது அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்று கோதுமை மா மானிய விலையில் விநியோகிக்கப்படுமாயின் அது அந்த மக்களுக்கு சற்று ஆறுதல் அளிக்கும் விடயமாக மாறும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. எனினும் வழங்கப்படுமா என்பது கேள்விக்குறியே!



# ராஜபக்ஷக்களின் தனியோட்டம்

-தேசிகன்-



‘இரண்டு வருடங்களை மறந்து விடுங்கள். புதிதாக ஆரம்பியுங்கள். அனைத்துக் கஷ்டங்களும் நீக்கிவிடும். இனி எல்லாம் வெற்றி தான் ஜனவரி 18ஆம் திகதியிலிருந்து புதிதாக ஆரம்பியுங்கள்’ இந்த வார்த்தைகளை சிறிலங்கா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடத்தில் உதிர்த்தவர்கள் தீர்மானிக்கும் சக்தியை தங்களிடத்தில் கொண்டுள்ள அஸ்கிரிய, மல்வத்த உட்பட நான்கு பௌத்த பீடங்கங்களின் பீடாதிபதிகள்.

புத்தாண்டு பிறந்தவுடன் அநுராதபுரத்துக்கும், கண்டிக்கும், கதிர்காமத்துக்கும் சென்று பிரசித்தி பெற்ற விகாரைகளில் தொடர்ச்சியான வழிபாடுகளை நடத்தியிருந்தார் ஜனாதிபதி கோட்டாபய. குறிப்பாக, கதிர்காமத்திரும், ரஜமகா விஹாரையும் ராஜபக்ஷ குடும்பத்தினரே பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

இதனைவிடவும், மஹா சங்கத்தினரின் ஆசீர்வாதங்களைத் தெரிவிக்கும் வகையில் மஹா விஹாரவங்சிக கோட்டே ஸ்ரீகல்யாணி சாமஸ்ரீ தர்ம மஹா சங்க சபையினால் கோட்டாபயவுக்கு ‘ஸ்ரீ லங்காதீஸ்வர பத்மவிபூஷண்’ என்ற கௌரவ பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

கோட்டாபயவின் வழிபாடுகளும், அவருக்கான கௌரவப்பட்டமும் இன்னமும் பௌத்த பீடங்களும், தேரர்களும் அவர் மீது அபரிமிதமான நம்பிக்கையைக் கொண்டிருக்கின்றார்கள் என்பதன் வெளிப்பாடு தான். அதேநேரம், கோட்டாபயவும் இன்னமும் சிங்கள, பௌத்த, தேசிய வாதக் கட்டமைப்பிற்குத் தான் விசுவாசமாக இருக்க வேண்டும் என்ற கோதாவில் உள்ளார் என்பதும் வெளிப்பட்டுள்ளது.

இந்த வெளிப்பாடு, பாராளுமன்ற அக்கிராசன உரை, 74ஆவது சுதந்திர தின உரை ஆகியவற்றிலும், பெப்ரவரி 9ஆம் திகதி நடைபெற்ற அநுராதபுரக் கூட்டத்திலும் மிகத் தெளிவாக வெளிப்பட்டுள்ளது.

ஆனாலும், இந்த மூன்று உரைகளிலும் ஒரு பொதுவான விடயத்தினை அவர் வெளிப்படுத்தியுள்ளார். அது தான் புலம்பெயர் சிறிலங்கா பிரஜைகளை முதலீடுகளைச் செய்வதற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

புலம்பெயர் தேசங்களிலர் சிறிலங்காவைச் சேர்ந்த 2மில்லியன் பேர் இருக்கின்றார்கள். இதில் கணிசமானவர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றுகின்றார்கள். எஞ்சியோர் ஐரோப்பியா உள்ளிட்ட நாடுகளில் உள்ளார்கள்.

மத்திய கிழக்கு நாடுகளில் உள்ளவர்களால் சிறிலங்காவில் முதலீடுகளைச் செய்ய முடியாது. ஏனென்றால் அவர்களின் வருமானம் அவ்வாறு தான் உள்ளது. ஆனால் ஐரோப்பியாவில் உள்ளவர்களால் சிறிலங்காவில் முதலீடுகளைச் செய்ய முடியும்.

அவ்விதம் சிறிலங்காவில் முதலீடுகளைச் செய்யக் கூடிய வகையில் உள்ளவர்களில் பெரும்பான்மையான ஆதிக்கம் செலுத்தும் சக்தியைக் கொண்டிருப்பவர்கள் தமிழர்களாகவே உள்ளனர். இவர்கள் வடக்கு, கிழக்கிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள்.

ஆனால் இவர்களுக்குத்தான் ராஜபக்ஷ அரசாங்கம் ‘பிரிவினைவாதிகள்’ என்ற அடிப்படையில் புலிகளின் தொடர்ச்சிகள் என்ற முத்திரையைக் குத்தி வைத்துள்ளது. அவ்விதமான முத்திரை குத்தப்பட்டவர்களால் எவ்வாறு ராஜபக்ஷவின் அழைப்பினை ஏற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன் இவர்கள், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி, நியாயம் வேண்டி இறுக்கமான நிலைப்பாடுகளுடன் போராடிக் கொண்டிருப்பவர்கள். அவர்களால் எவ்வாறு ராஜபக்ஷவின் அழைப்பினை ஏற்க முடியும் என்பது அடுத்த விடயம்.

இவற்றுக்கெல்லாம் அப்பால், புலம்பெயர் தமிழர்கள் சிறிலங்காவிற்கு வருகை தந்து முதலீடுகளைச் செய்வதற்கான சூழலை ஏற்படுத்துவதில் ராஜபக்ஷ அரசாங்கம் தோல்வியே கண்டுள்ளது. முதலீடுகளை மேற்கொள்வதற்கு ராஜபக்ஷ அரசாங்கம் அழைப்பு விடுவதற்கு முன்னதாக உள்நாட்டில் அதற்கான சூழலை ஏற்படுத்த வேண்டும்.

ஆனால், ராஜபக்ஷ அரசாங்கம் அதற்கு தயாரில்லாது முதலீடுகளைச் செய்வதற்கு அழைப்பு விடுத்திருக்கின்றது. இது அண்மைய காலத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை சீர்செய்வதற்கான ஒரு உபாயம் தான்.

குறிப்பாக, நாட்டினுள் டொலர்களின் உள்வருகையை உறுதி செய்வதற்கான ஒரு முயற்சியாகத்தான் ராஜபக்ஷ அரசாங்கம் இவ்வாறு தொடர்ச்சியாக புலம்பெயர்ந்தவர்களின் முதலீட்டுக்கான அழைப்பினை விடுத்துள்ளது. அதனைவிட, புலம்பெயர்ந்தவர்கள் மீதான நம்பிக்கையில் அல்ல.

இதேநேரம், இவ்வாறு புலம்பெயர்ந்தவர்களுக்கு அழைப்பு விடுக்கும் ராஜபக்ஷ அரசாங்கம் பிறிதொரு செயற்பாட்டை திரைமறைவில் முன்னெடுத்துள்ளது. பெப்ரவரி 9ஆம் திகதி அநுராதபுரத்தில் பொதுஜனபெரமுனவின் தொடர் பொதுப்பேரணிகளின் முதலாவது கூட்டம் நடைபெற்றிருக்கின்றது.

இந்தக் கூட்டம் கோட்டாபயவை ஆட்சிப்பீடத்தில் அமர்த்துவதற்காக 2018இல் நடைபெற்ற முதலாவது கூட்டம் இடம்பெற்ற அநுராதபுரம் மைதானத்திலேயே நடைபெற்றிருக்கின்றது. கோட்டாபயவின் ‘சுபீட்சத்தின் நோக்கு’ என்ற கொள்கைப் பிரகடனத்திற்கு மீண்டும் புத்துயிர் அளிப்பதற்கான பொதுப் பேரணிகளின் முதலாவது கூட்டம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்தக் கூட்டம் மிகக் கிட்டிய காலத்தில் தேர்தலொன்றுக்கு முகங்கொடுப்பதற்கான பொதுஜன பெரமுனவின் தயார்ப்படுத்தல் என்பது தான் யதார்த்தமான விடயமாகும். ஆனால் இந்தக் கூட்டத்திற்கு பொதுஜனபெரமுனவின் பங்காளிகள் அழைக்கப்பட்டிருக்கவில்லை.

குறிப்பாக, தினேஷ், வாசு, விமல், கம்மன்பில, திஸ்ஸ உள்ளிட்டவர்கள் அழைக்கப்பட்டிருக்கவில்லை. அதேநேரம், சர்ச்சைக்குரிய விவசாய அமைச்சரான மகிந்தானந்த அளுத்கமகேயும் அழைக்கப்பட்டிருக்கவில்லை.

அநுராதபுரத்தில் கணிசமான விவசாயிகள் இருக்கின்ற நிலையில் மகிந்தானந்தவை மேடையேற்றினால் கடுமையான எதிர்ப்பிற்கு ஆளாக நேரிடும் என்பதால் ராஜபக்ஷக்கள் அவரை மெதுவாக கழற்றிவிட்டிருக்கலாம்.

ஆனால் பங்காளிகள் அழைக்கப்படாமைக்கு காரணம், பொதுஜனபெரமுன ‘தனியாக’ செல்வதற்கு தயராக இருக்கின்றது என்பதுதான். விரும்பினால் பொதுஜனபெரமுனவின் போக்குகளுக்கும், செயற்பாடுகளுக்கும் உடன்பட்டு இருங்கள் இல்லையேல் செல்லுங்கள் என்ற செய்தியைத் தான் இந்தக் கூட்டத்தின் கூடாக ராஜபக்ஷ தங்களது பங்காளிளுக்கு கூறியிருக்கின்றார்கள்.

அதேநேரம், உடனடியாக உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கான முனைப்பில் உள்ள ராஜபக்ஷகள் அதற்கான பூர்வாங்கமாக இந்தக் கூட்டத்தினை நடத்தியுள்ளதாகவும் தகவல்கள் உண்டு.

இதன் தொடர்ச்சியாக நடாளாவிய ரீதியில் கூட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு வழிவரைபடமொன்றை பஷில் ராஜபக்ஷ வரைந்திருப்பதாக தகவல்கள் உள்ளன.

அதேநேரம், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை அறிவித்து விட்டு இவ்விதமான பிரசாரங்களை முன்னெடுத்துக் கொண்டு பிறிதொரு விடயத்தினையும் நகர்த்துவதற்கு பஷிலின் வழிவரைபடத்தில் திட்டமிடப்பட்டுள்ளது.

அதாவது, உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை ‘புதிய அரசியலமைப்புக்கான சர்வஜன வாக்கெடுப்பாகவும் பிரகடனம் செய்தல்’ என்பதே அந்த திட்டமாகும்.

இதன்மூலம் வலுவான ஒற்றையாட்சி கோட்பாட்டினையும், சிங்கள, பௌத்த தேசிய வாதம் நிறைந்த அரசியலமைப்பிற்கு மக்களின் பேராதரவைப் பெறுவதே ராஜபக்ஷக்களின் ஒட்டுமொத்தமான இலக்காகும்.

ஒருவேளை அடிமட்டத்தில் நிலைமைகள் எதிர்மறையாக இருக்கின்றது என்பதை அடுத்து வரும் பொதுப்பேரணிகளின் தொடர் கூட்டங்கள் வெளிப்படுத்தினால் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை முன்னெடுப்பதை ராஜபக்ஷ தரப்பு கைவிடலாம்.

அவ்வாறு கைவிட்டாலும், மறுபக்கத்தில் அடுத்த ஆண்டு பெப்ரவரிக்குப் பின்னர் கோட்டாபயவிற்கு நாடாளுமன்றத்தினைக் கலைக்கும் அதிகாரம் கைகளில் கிடைக்கின்றது. அந்த அதிகாரம் அவருடைய கையில் கிடைக்கின்றபோது நிச்சயமாக நாடாளுமன்றத்தினை அடுத்த ஆண்டு மார்ச் முதல் மே இற்குள் கலைப்பதற்கு அவர் விளைவார் என்றும் கூறப்படுகின்றது.

ஏனென்றால் முதலில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினால் சிதறிப்போய்க் கிடக்கும் எதிரணியானது ஒன்றிணைந்து பலமாக மாறாது என்பது ராஜபக்ஷக்களின் கணக்கு. அதேபோன்று, பங்காளிகளுக்கும் பாடம் புகட்டி விடலாம் என்பதும் பிறிதொரு கணக்கு.

எனினும் நாடாளுமன்றத்திற்கான தேர்தலை நடத்துகின்றபோது மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் இல்லாது போனாலும் ஆகக்கூடியது நூறுக்கும் மேற்பட்ட ஆசனங்களை கைப்பற்றுகின்றபோது பின்னா முஸ்லிம் தரப்பினை வளைத்துப்போட்டு நாடாளுமன்ற பெரும்பான்மையான 113ஆசனங்களை உருவாக்கி விடலாம் என்பதுவும் ராஜபக்ஷக்களின் கணக்கு.

ஆக, ராஜபக்ஷக்கள் தனியாக பயணிப்பதற்கு தயாராகி விட்டார்கள். தனிக் கட்சி ஆட்சியை அமைப்பதற்கும் தயாராகிவிட்டார்கள். ஏனென்றால் அவர்கள் பின்பற்றுவது சீனாவின் தனிக்கட்சி ஆட்சியை. பஷில் கனவும் கூட சீன கம்னியூச கட்சியைப் போன்று பொதுஜனபெரமுனவை மாற்றுவது தான்.



# ஜூலி சங் அபாய சங்கா?

**தீரன்**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத்தொடர் பெப்ரவரி 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் சிறிலங்காவுக்கான புதிய அமெரிக்க தூதுவர் ஜூலி சங் கடமைகளைப் பொறுப்பேற்றிருக்கின்றார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பினராக அமெரிக்கா மீண்டும் உட்பிரவேசித்துள்ள நிலையில் தான் புதிய தூதுவர் ஜூலி சங் சிறிலங்கா வந்துள்ளார்.

வந்தவர் அமைதியாக வரவில்லை.



செனட் சபையின் நேர்முகத்தின் போது தான், சிறிலங்கா தூதுவராக நியமனம் பெற்றால், 'ஜனநாயக விழுமியங்கள், மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூகம் ஆகியவற்றிற்கு ஆதரவாகவும், தொடர்ச்சியாகவும் பேசுவதற்கு உறுதிபூண்டுள்ளேன்' என்று குறிப்பிட்டிருந்தார்.

இதனையே தான் பெப்ரவரி 10ஆம் திகதி இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதி உதவிச் செயலாளர் வெண்டி ஷேர்மன் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்த பின்னர் சிறிலங்காவுக்கான தூதுவரின் உத்தியோக பூர்வ கீச்சகப் பக்கத்தினைப் பொறுப்பேற்று முதல்பதிவாகவும் இட்டிருந்தார்.

இதனைவிடவும், பதவியேற்ற கையோடு மறுதினத்தில் அவர் சந்தித்து அமெரிக்க வாழ் புலம்பெயர் இலங்கையர்களைத் தான். ஆனால் அந்த வகையறைக்குள் இருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் தாயகத் தமிழர்கள்தான்.

இதன்போது சிறிலங்காவில் பணியாற்றும் காலத்தில் அவர் முன்னுரிமை அளிக்கப்போகும் விடயம் குறித்து கேள்விகள் சரமாரியாக எழுந்தபோது,

கொழும்பில் தனது பதவிக்காலத்தில் மனித உரிமைகள், இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறல் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக, இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கு முன்னுரிமை அளிக்கப்போவதாகவே அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

தொடர்ந்து, சிறிலங்காவுக்குச் செல்வதற்கு விமானம் ஏறுவதற்கு சற்று முன்னதாக, அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கனையும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். அந்தச் சந்திப்பின்போது, சிறிலங்காவுக்கான அமெரிக்கத்தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளமையை தான் கௌரவமாகக் கருதுவதாக தெரிவித்துள்ளார்.

அத்தோடு இரு நாடுகளினதும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் இருநாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை வலுப்படுத்துவதற்கும் இலங்கை அரசாங்கம், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் உங்களைப்போன்ற (இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளின்கன்) போன்ற நபர்களுடன் ஒன்றிணைந்து செயற்பட எதிர்பார்த்திருப்பதாக தான் கூறியதாகவும் ஜூலி சங் கீச்சகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதிலிருந்து அவர் மனித உரிமைகள், பொறுப்புக்கூறல் விடயத்தில் ஆழமான கரிசனையையும், அதற்கான உந்துதல்களையும் நிச்சயம் அளிக்கப்போகின்றார் என்பது பொதுப்படையாக வெளிப்படுகின்றது.

ஆனால், அவர் சிறிலங்கா வந்திறங்கியதும் முதல் கருத்துப்பரிமாற்றத்தினை காணொளிவாயிலாக பதிவிட்டுள்ளார். அப்பதிவில், என்னைப்பொறுத்தமட்டில் இலங்கைக்கு மீண்டும் வருகைதருவது கனவொன்று நனவானதைப்போன்ற விடயமாகும். நான் பத்து வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வருகை தந்திருந்தேன். அந்த நினைவுகள் இப்போதும் தெளிவாகவும் புதிதாகவும் என்னுள் பதிந்திருக்கின்றன.

ஆச்சரியம் மிகுந்த இயற்கை அழகு, சுவையான உணவுப்பொருட்கள் மற்றும் வாசனைத்திரவியங்கள் புகையிரம் மற்றும் முச்சக்கரவண்டிகள், அவையனைத்திற்கும் மேலாக அப்போது நான் சந்தித்த இலங்கை மக்கள் காண்பித்த அன்பு உள்ளிட்ட அனைத்தும் நினைவிருக்கின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது இலங்கைக்கான தூதுவராகப் பதவியேற்பது எனக்குக் கிடைத்த கௌரவமாகும். அதனூடாக இலங்கையின் கலாசாரம், பாரம்பரியம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் மேலும் அறிந்துகொள்வதற்கு எதிர்பார்க்கின்றேன்.

உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் குடியேறிய மக்களின் முயற்சியினால் கடந்த இரு நூற்றாண்டு காலமாக நவீன தொழில்நுட்ப மாற்றங்கள் மற்றும் புத்தாக்கங்களை உள்வாங்கி அமெரிக்கா முன்னேற்றம் கண்டிருப்பதுடன் அதன் பொருளாதார வளர்ச்சிக்குப் பலரும் பங்களிப்புச்செய்திருக்கின்றார்கள்.

அந்த முயற்சி இலங்கைக்கான தூதுவர் என்ற ரீதியில் நான் ஆற்றவிருக்கும் பணியிலும் பிரதிபலிக்கும். அதன்படி இலங்கையிலுள்ள சிவில் சமூக அமைப்புக்கள், வர்த்தகத்துறையினர் மற்றும் இளைஞர்கள் உள்ளிட்ட தரப்புக்களுடன் ஒன்றிணைந்து பணியாற்றுவதன் ஊடாக மக்களுக்கு இடையிலான தொடர்புகளை வலுப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளேன்.

இவற்றுக்கு முன்னர் என்னைப் பற்றிய சில விடயங்களைப் பகிர்ந்துகொள்வதற்கு விரும்புகின்றேன். அமெரிக்கப்பிரஜை என்ற ரீதியில் நான் முதலாவது தலைமுறையைச் சேர்ந்தவளாவேன். எனக்கு ஐந்து வயதாக இருந்தபோது எனது குடும்பம் கொரியாவிலிருந்து அமெரிக்காவிற்குக் குடிபெயர்ந்தது.

ஆகவே பல்லினத்தன்மை மற்றும் சகிப்புத்தன்மை என்பன எனக்கு மிகமுக்கியமான விடயங்களாக இருப்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

எனது குடும்பம் இலங்கை - அமெரிக்க சமூகத்தினர் பெருமளவிற்கு செறிந்துவாழும் பகுதியான கலிபோர்னியாவில் குடியேறியது. இந்நிலையில் எமது செல்லநாய் மார்த்தாவுடன் எனது கணவர் மற்றும் மகனும் என்னுடன் இலங்கைக்கு வருகின்றார்கள். அதேபோன்று மலையேறல், நீச்சல் உள்ளிட்ட அனைத்து விளையாட்டுக்களையும் பார்வையிடுவது எனக்குப் பிடித்த விடயமாகும்.

எனவே குறிப்பாக கிரிக்கெட் பற்றி அறிந்துகொள்வதற்கும் இலங்கையின் தேசிய அணியை ஊக்குவிப்பதற்கும் எதிர்பார்த்துள்ளேன். என்னை இலங்கைக்கு வரவேற்றமைக்கு நன்றி கூறுவதுடன் இயலுமானவரை உங்களில் பலரைச் சந்திப்பதற்கு ஆர்வத்துடன் இருக்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம், சிறிலங்கா வாழ் சமூகங்களை தன்பால் கவர்ந்திழுக்கும் மொழியாடல் என்பதற்கு அப்பால், 'நான் சிறிலங்காவை நன்கு அறிவேன்' என்ற செய்தியையும் சொல்லாமல் சொல்லியிருக்கின்றார்.

இந்தச் செய்தி, சிறிலங்கா அரசாங்கத்திற்கும் சேர்த்துச் சொல்லப்பட்ட செய்தி தான். ஏனென்றால், ஜூலி சங்கின் நியமனத்திற்கு அதிகளவு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது என்ற நிலைமைகள் மேலெழுந்தபோதே சிறிலங்கா வெளிவிவகார அமைச்சு அதற்கான பதிலளிப்புக்களைச் செய்தவற்கு விடயங்களை ஆராய்ந்து கொண்டிருந்தது.

அதில், ஜூலி சங் பதவியேற்றவுடன் புலம்பெயர்ந்தவர்களை சந்தித்தமை, மெல்லும் வாய்க்கு கிடைத்த அவலாக மறியிருந்தது. அதாவது ஜூலி சங் சிறிலங்காவிற்கு வருகை தந்ததன் பின்னர், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் விடயத்தில் காட்டமாக இருந்தால் அவர் புலம்பெயர்ந்தவர்களின் நிகழ்ச்சி நிரலில் சிறிலங்காவின் இறையாண்மைக்கு எதிராகச் செயற்படுகின்றார் என்று குறிப்பிட்டு மறுத்தாடுவதற்கான திட்டமொன்றும் தீட்டப்பட்டிருந்தது.

ஆனால்,இப்போது அந்தத் திட்டம் பலிக்காத நிலைமையே ஏற்பட்டுள்ளது.

ஏனென்றால், ஜூலி சங் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் வரையில் சென்றுவிட்டே வந்திருக்கின்றார். தற்போதைக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், மற்றும் உப ஜனாதிபதி கமலா ஹரீஸ் ஆகியோரின் அலுவலக அறைக்கதவுகளை மட்டுமே அவர் தட்டவில்லை. தேவை ஏற்பட்டால் அதற்கும் தயங்கமாட்டார் என்பது தான் தகவல்.

ஜூலி சங் கொரியாவைப்பூர்வீகமாகக் கொண்டிருந்தாலும் அவர் வளர்ந்தது என்னமோ கலிபோர்னியாவில் தான். புலம்பெயர்ந்து உலக வல்லரசு தேசத்தில் சாதித்த பலரில் மிக முக்கியமானவர் ஜூலி சங்.

இவர், அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தில் மேற்கு ஹெமிஸ்பியர் விவகாரப்பணியகத்தின் பதில் உதவிச் செயலாளராகப் பணியாற்றியிருப்பதுடன் இராஜாங்கத்திணைக்களத்தில் ஜப்பானிய விவகார அலுவலகத்தின் பணிப்பாளராகவும் பதவிவகித்துள்ளார்.

மேலும் கம்போடியாவின் ஃபோம் பென்னில் அமைந்துள்ள அமெரிக்கத்தூதரக விவகாரங்களுக்கான பிரதி தலைவராகவும் தாய்லாந்தின் பாங்கொக்கில் உள்ள அமெரிக்கத்தூதரகத்தில் பொருளாதார ஆலோசகராகவும் ஜூலி சங் செயற்பட்டுள்ளார்.

அதுமாத்திரமன்றி கொலம்பியா, வியட்நாம் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளிலுள்ள அமெரிக்கத்தூதரகங்களிலும் சீனாவிலுள்ள அமெரிக்க கொன்சியூலர் அலுவலகத்திலும் அவர் பல்வேறு பதவிகளை வகித்துள்ளார்.

இத்துணை 'பெறுமானம்' மிக்க ஒருவரை சிறிலங்காவுக்கான தூதுவராக அமெரிக்கா நியமிக்கின்றது என்றால் வெறுமனே சிறிலங்காவை கையாள்தல் என்பதற்கு அப்பால் இந்தோ-பசிபிக் மூலோபாயத்தினை முழுமைப்படுத்துதற்கும் சேர்த்து தான் என்ற புரிதல் தமிழ்த் தரப்புக்கு இருப்பது அவசியமானது.



-பூலோகன்-



# பகடைக் காயாகும் உக்ரைன்

உக்ரைன் எல்லையில் ரஷ்யா தனது படைகளைக் குவித்தமையால் அமெரிக்க, உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளின் ஒருங்கிணைந்த உக்ரைன் ஆதரவு மற்றும் கடுமையான கண்டங்களை அடுத்து மூன்றாவது உலகப்போருக்கான 'போர்த்தீ' கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் நேட்டோபடைகள் உக்ரைனுக்கு ஆதரவாக களமிறங்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்திருந்தன. பிரித்தானியா, கனடா உள்ளிட்ட நாடுகள் உக்ரைனுக்கு ஆயுத உதவிகளை வழங்குவதாக அறிவித்து ஒருதொகுதியை அனுப்பியும் வைத்திருந்தன.

ஆனால், உக்ரைனை மையப்படுத்திய வல்லரசுகளுக்கு இடையிலான மோதல்கள் போராக வெடிக்கும் பட்சத்தில் அது பூகோளம் எங்கும் அனைத்து வகையிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்ற விடயம் பல்வேறு தரப்பினராலும் ஆணித்தனமாக எடுத்துரைக்கப்பட்டு வந்தது. தற்போதும் பகிரங்கமாக உரைக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் இரு தலைவர்கள் உக்ரைனை மையப்படுத்தி அமெரிக்க,ஐரோப்பிய கூட்டுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான பரஸ்பர அறிக்கைப் போராட்டங்களை நிறுத்தி இராஜதந்திர பேச்சுக்களில் களமிறங்கயிருந்தனர்.

அதில் முக்கியமானவர், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன். அவர் ரஷ்யா சென்று ஜனாதிபதி விளாடிமிர் புட்டினைச் சந்தித்துக் கலந்துரையானார். தொடர்ந்து உக்ரைன் சென்ற அவர் ஜனாதிதி ஷெலன்ஸ்கியுடன் உரையாடிவிட்டு பேர்லின் சென்று அங்கே ஜேர்மன் அதிபர் ஒலப் ஷோல்ஸ் மற்றும் போலந்து ஜனாதிபதி டுடா ஆகியோருடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

அதேநேரம், மக்ரோன் மொஸ்கோவில் புட்டினுடன் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்த ஏகநேரத்தில் ஜேர்மன் அதிபர் ஷோல்ஸ் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுடன் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தார். அங்கே பேச்சுக்களை முடித்துக் கொண்டு திரும்பியிருந்த அவர் பேர்லினில் பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோனைச் சந்தித்து நடத்திய பேச்சுக்கள் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன.

இந்தச் சந்திப்புக்கள் ஒவ்வொன்றின் பின்னரும் சந்திப்பில் ஈடுபட்டு கலந்துரையாடல்களில் பங்கேற்ற தலைவர்கள் வெளியிட்ட 'கூட்டு அறிக்கைகள்' பதற்றம் விரைவில் தணியும் என்ற ஆறுதலை அளித்திருந்தது.

அத்தகைய ஆறுதலான நிலைமை மெல்லமெல்ல தோற்றம் பெற்றமையால், இந்த முயற்சியில் ஈடுபட்ட பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் மற்றும் ஜேர்மன் அதிபர் ஷோல்ஸ் ஆகியோரை முழு உலகமும் பாராட்டியது.

இந்தப் பாராட்டு, அடுத்த பிரான்ஸில் நடைபெறவுள்ள தேர்தலில் 'மக்ரோன்' தரப்பிற்கு சாதகமாக அமையப்போகிறது என்பதோடு அஞ்சலா மேர்கலுக்குப் பின்னர் அவருடைய பதவியை பிரதிநிதித்துவம் செய்யும் ஷோல்ஸூக்கும் ஜேர்மனிலும், ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் தனியான கௌரவத்தினை வழங்கியுள்ளது.

இதுவொருபுறமிருக்க, உக்ரைன் பதற்றம், முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ரஷ்யா உக்ரைனை தாக்குவதற்கு திட்டமிடுவதாகவும், அதற்கான நகர்வுகளில் ஈடுபட்டுள்ளதாகவும் மீண்டும் மீண்டும் கூறலானார்.

அத்துடன், ரஷ்யா எல்லையில் இருந்து படைகளை மீண்டும் மீளப்பெறும் எண்ணத்தில் இருக்கவில்லை என்றும், ரஷ்யா கூறுவது போன்று எல்லையில் இருந்து படைகள் மீறப்பெற்றமைக்கான எந்தவிதமான சான்றாதாரங்களும் இல்லையென்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மீண்டும் உரத்துக் கூறினார்.

அத்துடன், உக்ரைன் விடயத்தில் ரஷ்யாவின் அண்மைக்கால நடவடிக்கைகள் ஏமாற்றமளிப்பவையாக இருக்கையில், இந்த விடயத்தினை சுமூகமாக்கும் செயற்பாட்டின் ஒரு அங்கமாக இருக்கும் ரஷ்ய ஜனாதிபதி புட்டீனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விரும்பவில்லை என்றும் பைடன் கூறினார்

ரஷ்ய ஜனாதிபதி புட்டீரோன உக்ரைனை தாக்கும் திட்டம் எதுவும் தமக்கில்லை என்று சத்தியம் செய்யாத குறையாக பதிலளித்துக்கொண்டே இருந்தார்.

அதேநேரம், இன்னும் சில நாட்களில் உக்ரைனுக்குள் ரஷ்ய படைகள் ஊடுருவி தாக்குதல் நடத்தும் என்றும் தங்கள் நாட்டைச் சேர்ந்த குடிமக்கள் உக்ரைனில் இருந்து வெளியேறுமாறும் அங்கு யாரும் செல்ல வேண்டாம் என்றும் அமெரிக்கா அறிவித்தது.

எனினும், நிலைமைகள் சுமூகமடைவதாக, இல்லாத நிலையில் தான் பிரித்தானியா, கடனா, சுவீடன், இந்தியா, உள்ளிட்ட சர்வதேச நாடுகள் பலவும் உக்ரைனில் தங்கியிருந்த தமது நாட்டின் பிரஜைகளை மீண்டும் நாட்டுக்கு வருமாறு அழைத்துக்கொண்டது.

அத்துடன், உக்ரைனில் தமது நாட்டின் தூதரகச் செயற்பாடுகளும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே முன்னெடுக்கப்படவுள்ளது என்றும், மேலும் சேவையில் முக்கியஸ்தர்களை தவிர ஏனையவர்களை வெளியேற்றப் போவதாகவும் பகிரங்கமாகவே அறிவித்தது.

இந்த நிலைமையானது, உக்ரைனில் நிச்சயமாக போர் மூண்டுவிடும் என்ற அபாயத்திற்கான சமிக்ஞையாகவே பார்க்கப்பட்டது. அத்துடன், உக்ரைனின் பாதுகாப்பு சம்பந்தமான இணையங்கள் மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இது நிலைமைகள் மேலும் பாரதூரமாவதை வெளிப்படுத்துவதாக இருந்தது.

இதற்கு அடுத்தபடியாக, ரஷ்யாவுக்கு ஆதரவான ஆயுதத் தரப்பொன்றால் உக்ரைன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. உக்ரைனின் எல்லையோர மாகாணமான டான்பஸில் ஒரு பகுதியானது, உக்ரைனின் கட்டுப்பாட்டிலும், மற்றொரு பகுதி ரஷ்ய ஆதரவு பெற்ற பிரிவினைவாதிகளின் கட்டுப்பாட்டிலும் உள்ளது.

டான்பஸ் மாகாணத்தில் உக்ரைன் கட்டுப்பாட்டில் உள்ள ஸ்டைனிஸ்டியா லுகன்ஸ்கா என்ற நகரில் உள்ள ஒரு கிராமத்தில் திடீரென தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது.

அந்த கிராமத்தில் உள்ள மழலையர் பாடசாலை மீது நடைபெற்ற இந்த தாக்குதலில் மழலையர் பாடசாலையில் பணியாற்றி வந்த 3 பேர் காயமடைந்ததாக சொல்லப்படுகிறது.

ரஷ்ய ஆதரவு பெற்ற பிரிவினைவாதிகள் இந்த தாக்குதலில் ஈடுபட்டிருப்பதாக கூறப்படுகிறது. இந்தச் சம்பவம், எரிந்துகொண்டிருக்கும் நெருப்பில் எண்ணெய்யை ஊற்றுவதற்கு நிகரானது.

இதனையடுத்து, உக்ரைனைச் சுற்றியுள்ள ஐரோப்பிய தரப்பினர் அமெரிக்காவுக்கு விடயத்தினைப் பரப்பவும், இரகசியமாக நேட்டோவை முன்னகர்த்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள விடயம் அம்பலமாகியது.

இந்நிலையில், மக்ஸார் டெக்னாலஜிஸ் நிறுவனம் உக்ரைனின் வடக்கு மற்றும் வடகிழக்கு எல்லையை அண்மித்து அமைந்துள்ள பெலாரஸ், கிரைமியா, மேற்கு ரஷ்யா பகுதியில் ஏராளமான இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டிருப்பதையும் இராணுவ தளவாடங்களை தயார் நிலையில் வைத்திருப்பதையும் அந்த செயற்கைக்கோள் படங்கள் உறுதி செய்துள்ளன.

ரஷ்யாவின் மிகப்பெரிய படைப்பிரிவுகள் எல்லையை நோக்கி வருவதையும், நவீன ரக ஹெலிகாப்டர்கள், போர் விமானங்கள் மற்றும் குண்டுகளை பொழியும் விமானங்கள் ஆகியவை தயார் நிலையில் இருப்பதும் அந்த புகைப்படங்களின் மூலம் மேலும் தெரியவருகிறது.

ஆனால் இந்த தகவல்களை முற்றாக மறுதலிக்கும் ரஷ்யா, தமது படைகளையும், தளவாடங்களையும் மீளப்பெறும் நடவடிக்கைகளில் களமிறங்கியுள்ளதாக கூறுகின்றது.

ரஷ்ய பாதுகாப்பு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் இகோர் கொனாஷென்கோவ் குறிப்பிடுகையில், ''உக்ரைன் எல்லையில் நிறுத்தப்பட்ட சில படைகள் தங்கள் பயிற்சியை முடித்த பின்னர் கிளம்புவதற்கு தயாராக உள்ளன. தெற்கு மற்றும் மேற்கு மாவட்ட இராணுவப்படையினர், தங்களது பணியை முடித்து விட்டு சாலை மற்றும் புகையிரதம் மூலம் தங்களது முகாமுக்கு திரும்பி வருகின்றனர்'' என்று தெரிவித்தார்.

இவ்வாறான பின்னணிகளின் பிரகாரம் பார்க்கையில், ரஷ்யாவுக்கும் அமெரிக்க, ஐரோப்பிய கூட்டுக்கும் இடையிலான அதிகாரப் போட்டியில் உக்ரைன் 'பகடைக்காயாக' உருட்டப்படுகிறது.

இருவேறுபட்ட அதிகார மையங்களின் எல்லைப் பகுதிகளுக்கு நடுவே காணப்படும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் உக்ரைன் அமைந்துள்ளதால் இவ்விதமான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது.

ஏற்கெனவே பொருளாதார நிலையில் பின்னடைவைச் சந்தித்துள்ள உக்ரைன் போர்ப் பதற்றச் சூழலால் மேலும் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகளே அதிகம். ஆகவே இங்கு நிலவும் பதற்றநிலை விரைவில் தணியாது விட்டால் அது பூகோளம் எங்கும் பிரதிபலிக்கும்.






வநமது ஈழநாட்டின் வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் இம்முறை முல்லைத்தீவு மாவட்டத்தில் வசிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவீரர் குடும்பங்களிற்கு ரூபா இரண்டு இலட்சம் பெறுமதியான வாழ்வாதார ஊக்குவிப்பு உதவிகள் வழங்கப்பட்டன.

அந்தவகையில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத் குலசேகரத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவில் வசிக்கும் மாவீரர் குடும்பங்கள் மற்றும் போரில் அங்கவீனமுற்ற முன்னாள் போராளிகள் உள்ளிட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட 5 குடும்பங்களிற்கு வாழ்வாதாரத்தை விரிவுபடுத்துவதற்காக தலா 20 ஊர்க்கோழிகள் வழங்கப்பட்டதுடன் மிகவும் வறுமை நிலையிலுள்ள முன்னாள் போராளி ஒருவருக்கும் மாவீர் குடும்பம் ஒன்றுக்கும் அவர்களின் சுயதொழிலை ஊக்குவிக்கும் நோக்கில் தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.





மனித உரிமை செயற்பாட்டாளர் கீத் குலசேகரத்தின் குடும்பத்தினரால் மனநலம் குன்றியவர்களுக்கான காப்பகம் மற்றும் சிறப்பு பள்ளி ஆகியவற்றில் வசிக்கும் 100 பேருக்கு மதிய உணவு வழங்கப்பட்டது